பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் இளைநூலகம்.

பொது சன நூலகம்
16 JAN 1997
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:12 வள்ளுவர் ஆண்டு 2028 தை 03 வியாழக்கிழமை (16-01-1997) UTHAYAN A Lively National Tamil Daily சுடர்: 50

## கொழும்பு வரும் குஜ்ராலுக்கு தீவிர பாதுகாப்பு ஏற்பாடு!



### ஞாயிறன்று விஜயம் 3 நாள்கள் தங்குவார்

கொழும்பு, ஜனவரி 16

இலங்கைக்கு மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கொழும்புக்கு வரும் இந்திய வெளிவிவகார அமைச்சர் குஜ்ராலுக்கும் அவரது குழுவினருக்கும் அதி உச்ச பாதுகாப்பு வழங்க இலங்கை அரசு ஏற்பாடு செய்திருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

கடந்த மாத இறுதியில் இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இந்தியாவுக்கு விஜயம் செய்து, இந்தியப் பிரதமர் உட்பட முக்கிய தலைவர்களைச் சந்தித்துப் பேசியதன் தொடர்ச்சியாக,

( 8 ஆம் பக்கம் பார்க்க )

### உயரதிகாரி இடமாற்றம்?

யாழ். கல்வித் திணைக்களத்தின் உயரதிகாரி ஒருவர் இரண்டொரு தினங்களில் திருகோணமலைக்கு இடமாற்றம் செய்யப்படவிருப்பதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவரது இடத்துக்கு வலிகாமம் தெற்குப் பகுதியில் பணியாற்றும் அதிகாரி ஒருவர் நியமிக்கப்படக் கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

### யாழ்ப்பாணத்தில் அலுவலகம் திறப்பதில் கட்சிகள் முனைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 16

''புளொட்'' அமைப்பு யாழ்ப்பாணத்தில் அலுவலகம் ஒன்றைத் திறந்துள்ளதாக அந்த அமைப்பின் வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். ஸ்ரான்லி வீதியில் ஆரியகுளம் சந்திக்கும் ரயில்வே கடவைக்கும் இடையில் உள்ள — முன்னர் ஹற்றன் நஷனல் வங்கியின் யாழ். கிளை அலுவலகம் தற்காலிகமாகஇயங்கிய — 'அரஸ்கோ' மாடிக் கட்டடத்தில் 'புளொட்' அலுவலகம் இயங்கும் என ஒரு செய்தி தெரிவித்தது.

அதே நேரம் — யாழ்ப்பாணம் சென்று அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பிக்கப் போவதாக ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்புப் பிரதிநிதிகளும் தெரிவித்தனர்.

தாங்கள் எப்போது யாழ்ப்பாணம் செல்லவிருக்கின்ற

( 8 ஆம் பக்கம் பார்க்க)

## தொடர்பு சாதனங்கள் மீதான அடக்கு முறைக்கு ஆட்சேபம்

### கோட்டை ரயில் நிலையம் முன் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜன. 16

பத்திரிகைகள் மற்றும் வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் மீதும் பத்திரிகையாளர்கள், செய்தியாளர்கள் போன்றோருக்கு எதிராகவும் மேற்கொள்ளப்படும் அரச அடக்குமுறைகளை ஆட்சேபித்து கொழும்புக் கோட்டை ரயில் நிலையத்துக்கு எதிராக நேற்றுச் சத்தியாக்கிரகமும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமும் நடைபெற்றன.

தொடர்பு சாதனங்களின் சுதந்திரத்துக்கான இயக்கம் ஏற்பாடு செய்திருந்த இந்தக் கண்டன நிகழ்ச்சியில் பல நூற்றுக்கணக்கான பத்திரிகையாளர்கள், செய்தியாளர்கள், புகைப்படச் செய்தியாளர்கள் பங்குபற்றினர்.

பத்திரிகையாளர்களுக்கு எதிராகப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை ஏவிவிட்டிருப்பதை ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் வன்மையாகக் கண்டித்தனர்.

ஐ. தே. கவின் எம்.பி ஒருவர் உள்ளிட்ட குழு ஒன்று திடீரென அங்கு வந்து ஆர்ப்பாட்டத்தின் போக்கை திசை திருப்ப முற்பட்ட தாகவும் —

இத்தகைய அரசியல் சக்திகள் தமது ஆர்ப்பாட்டத்தின் நோக்கை திசை திருப்ப முயற்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### நகைகளை துறந்தார் ஜெயலலிதா

சென்னை, ஜன. 16

இனிமேல் தாம் எந்தவகையான தங்க நகைகளையோ, கைக்கடிகாரங்களையோ அணியப் போவதில்லை என தமிழக முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அறிவித்திருக்கிறார்.

ஊழல் எதிர்ப்பு, கண்காணிப்புப் பணியகத்தால் கைப்பற்றப்பட்ட தமது அனைத்து ஆபரணங்களையும் மீண்டும் பெற்ற பின்னர் தாம் அவற்றை விற்று வரும் பணத்தைத் தர்மம் செய்ய

(8 ஆம் பக்கம் பார்க்க)

### புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் நாளையே!

கொழும்பு, ஜன. 16

கடந்த செப்ரம்பர் மாதம் நடந்த 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகளை வெளியிடுவதை பரீட்சைத் திணைக்களம் பின்போட்டுள்ளது.

இந்தப் பரீட்சை முடிவுகளை நேற்று வெளியிட பரீட்சைத் திணைக்களம் தயாராக இருந்ததாயினும், கல்வியமைச்சில் இருந்து கிடைத்த தகவல் ஒன்றையடுத்து முடிவுகள் வெளியாவது பிற்போடப்பட்டதாகத் தெரியவந்தது.

இந்தப் பரீட்சைக்கான வெட்டுப்புள்ளி குறித்து இன்று ஆராய்ந்த பின்னர் நாளை முடிவுகளை வெளியிட பரீட்சைத் திணைக்களம் தீர்மானித்துள்ளதாக நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

(உ-3)

### குடாக்கடலில் மோதல்

யாழ். குடாக் கடலில் நேற்று முற்பகல் இடம்பெற்றதாகக் கூறப்படும் துப்பாக்கி வேட்டுக்களை அடுத்து குடாக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் தமது தொழிலை இடைநடுவில் கைவிட்டு அவசர அவசரமாகக்கரைக்குத் திரும்பினர்.

பூநகரி கல்முனைக்கும் மண்டைதீவுக்கும் இடையில் மீனவர்கள் போல் படகு ஒன்றில் தரித்து நின்ற புலிகள், அப்பகுதியால் வந்த கடற்படையினரின் இரண்டு வள்ளங்களை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்ததாகவும்—

அவற்றில் ஒரு படகும் அதிலிருந்த மூன்று கடற்படையினரும் கரை திரும்பவில்லை எனவும் —

குருநகர் மீனவர்கள் தெரிவித்தனர். எனினும் இச்சம்பவத்தை ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை.

இதன்பின்னர் கல்முனைப் பகுதியை நோக்கி ஆட்லறி ஷெல்கள் ஏவிவிடப்பட்டன. அப்பகுதி மீது ஹெலிகள் மற்றும் சீ பிளேன் போன்றவை வட்டமிட்டதையும் அவதானிக்கக் கூடியதாகஇருந்தது.

(உ-15)

### முச்சந்தி முரளி



சூடு கண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது என்று சொல்லுறது இதைத்தான் பாருங்கோ..!

### கெப்பிற்றிக்கொலாவ சம்பவம்:

## லெப்டினன் கேணல் தர அதிகாரியே காயமுற்றார்

கொழும்பு, ஜன. 16

கடந்த 13 ஆம் திகதி அநுராதபுரம் மாவட்டம் கெப்பிட்டிக்கொலாவப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதலில் காயமடைந்தவர் கஜபாபுர இராணுவப் பிரிவின் கட்டளைத்தளபதி லெப்டினன்ட் கேணல் அஜித் சில்வா எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது

கஜபாபுரவில் உள்ள ஐந்தாவது ஆட்லறி படையணியின் தளபதியுமான இவர் தமது வாகனத்தில் முகாம்களுக்குச் சென்று அவற்றைப் பார்வையிட்டுக் கொண்டு வந்த சமயமே இத்தாக்குதல் இடம் பெற்றதாகவும்—

தாக்குதலுக்கு மத்தியிலும் ஜீப்பின் சாரதி விரைவாக

(8 ஆம் பக்கம் பார்க்க)

### கிட்டு நினைவு தினம் இன்று

விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்களில் ஒருவரான சதாசிவம் கிருஷ்ணகுமார் (கேணல் கிட்டு) மற்றும் அவருடன் வங்கக் கடலில் களப்பலியான வேங்கைகளின் நான்காம் ஆண்டு நினைவு தினம் இன்றாகும்.

இது தொடர்பான நினைவு எழுச்சிக் கூட்டங்கள், அவர்களின் உருவப் படம் தாங்கிய ஊர்திப் பேரணி ஆகியவை இம் முறை வன்னிப் பகுதியில் நடைபெறும் என செய்தி ஏஜென்ஸி ஒன்று அறிவித்தது.

இந்நிகழ்வை ஒட்டி அங்கு புலிகளின் அலுவலகங்கள், பொது இடங்கள், வர்த்தக நிலையங்கள், வீடுகள், வீதிகள் என்பன சிவப்பு — மஞ்சள் நிறக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு வருவதாகவும் அச் செய்தி ஏஜென்ஸி தெரிவித்தது.

நிகழ்வுகள் யாவும் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் என்றும் —

மாலையில் பிரமாண்டமான முறையில் நினைவு எழுச்சிப் பொதுக்கூட்டத்தை

(8ஆம் பக்கம் பார்க்க)

### வடக்குக்கு உணவு அனுப்பும் விடயம்:

## ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் இரு அதிகாரிகள் விசாரணை

கொழும்பு, ஜன. 16

வடபகுதிக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை அனுப்புவதிலே இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடிகள் சம்பந்தமாக பல முறைப்பாடுகள் கிடைத்ததை அடுத்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் உத்தரவின்பேரில் அரச உயர் அதிகாரிகள் இருவர் விசேட விசாரணை நடத்தியுள்ளனர் என்று ஞாயிறு ''சிலுமின'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அதன் பிரகாரம் யாழ்ப்பாணத்தில் பணிபுரியும் அரச உயர் அதிகாரி ஒருவரை இடமாற்றம் செய்ய நடவடிக்கை

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடன் தொடர்பு கொள்ளவும்

தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் அனுசரணையுடன் எமது காரியாலயத்தில் **1-07-94** தொடக்கம் **1-06-95** வரை தமிழ்/ஆங்கிலம் சுருக்கெழுத்து, தட்டச்சு பயின்ற மாணவர்கள் எமது காரியாலயத்துடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

**கௌரவ செயலாளர்,**
**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,**
**யாழ். கிளை.**

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். (சி/3935)

## “சாந்திகம்”
## உளவியற் சான்றிதழ் அடிப்படைப் பயிற்சி

மேற்படி பயிற்சியைத் தொடர விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப் பயிற்சி சனி, ஞாயிறு தினங்களில் நடத்தப்படும். விரிவுரைகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் வழங்கப்படும்.

விண்ணப்பப்படிவங்களைப் பெற விரும்புவோர், **“சாந்திகம்”, இல. 15, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்** என்னும் முகவரியில் **17-01-1997** தொடக்கம் கிழமை நாள்களில், அலுவலக நேரங்களில் ரூ. **10/-** செலுத்திப் பெற்றுக்கொள்ளவும்.

இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட விண்ணப்பப் படிவங்களே ஏற்றுக்கொள்ளப்படும்.

பூர்த்தியாக்கப்பட்ட படிவங்களை 31-01-1997 இற்கு முன் தபால் மூலமாகவோ, நேரடியாகவோ மேற்குறிப்பிட்ட விலாசத்தில் கிடைக்கக்கூடியதாக அனுப்பவும்.

குறிப்பு:

22-08-1995 இற்கும் 31-08-1995 இற்கும் இடையில் பூர்த்திசெய்து அனுப்பிய விண்ணப்பதாரர்கள் புதிதாக விண்ணப்பங்கள் அனுப்பத் தேவையில்லை.

**ஆ. அருணகிரிநாதன்**
**செயலாளர்**

உளவளத் துணை நிலையம்,
யாழ்ப்பாணம். (சி/3933)

யா/கன்னியர் மடம் மகாவித்தியாலய ஆசிரியை
## செல்வி செபஸ்ரி மேரி திரேசா
அவர்களின் திடீர் மறைவின் பிரிவால் துயருறும்
**பழைய மாணவரின்**
## கண்ணீர் அஞ்சலி
[மறைவு **15 - 01 - 97**]

அறநெறி தவறாத ஆசிரிய பெருந்தகையே! பள்ளிச் சிறுமியாய் பயின்றகத்திலேயே பணிபுரிய பறந்தோடி வந்தாயம்மா! பார்புகழும் பணியாற்றி ஆண்டு மூன்று சென்றதம்மா! பழைய மாணவி என்றதால் சங்கத்தின் தலைவியாய் ஆண்டு இரண்டு அரும் பணியாற்றினாயம்மா! உம்பணி மறக்கற்பாலதோ! பழைய மாணவி என்றதால் பயிலகத்து நீ ஆற்றிய சேவை நீ போட்ட திட்டமெல்லாம் கானல் நீராக கருகி மறைந்ததம்மா! கண்ணிமைக்கும் நேரத்துள் காலன் உன்னைக் கவர்ந்தானோ? மறக்க முடியாதம்மா உன் மறைவு.

(44699) **பழைய மாணவர் சங்கம்**

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை பதில் பிரதி அதிபர்
**திருமதி இந்திராணி பாலச்சந்திரன்**
அவர்களின் தந்தையார்
**அமரர்**
## கந்தையா தாமோதரம்பிள்ளை

அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் கண்ணீர் அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஆசிரியர் ஒன்றியம்,**
யா / தாவடி இ. த. க. பாடசாலை,
கொக்குவில்.
(44704)

## இதய அஞ்சலி

### திரு. J. யேசுதாசன்
(B.A., Dip. in Ed., S.L.P.S. Gr.II)

எமது கல்லூரியில் சிறந்த பணியாற்றிய முன்னாள் ஆசிரியரை நினைந்து வருந்துகின்றோம்.

**அதிபர், ஆசிரியர் கழகம்,**
யா / ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
சுன்னாகம்.
(44709)

## நவீன படகுகளை பயன்படுத்த முடிவு

இராமேஸ்வரம் தனுஷ்கோடி கடற்பகுதியில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள நவீன ரோந்துப் படகுகள் பயன்படுத்தப்பட உள்ளதாக இந்தியக் கடற்படையின் தென்மண்டல அதிகாரி கொமடோர் ஏ. கே. அருண்மாதன் தெரிவித்துள்ளார்.

இராமேஸ்வரத்திலுள்ள இந்திய கடற்படை முகாமை நேற்று பார்வையிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் தமிழக கடலோர பகுதியில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் முற்றிலும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறினார். (உ-4)

## நஷ்டஈடு கொடுப்பனவு

யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு உட்பட ஆறு மாவட்டங்களைச் சேர்ந்த 179 அரச ஊழியர்களுக்கு பயங்கரவாத நடவடிக்கைகளால் சொத்துக்களை இழந்தமை தொடர்பான நஷ்டஈடு நேற்று முன்தினம் வழங்கப்பட்டது என்றும் —

இவர்களுக்கு ஒரு கோடி பத்து லட்சம் ருபா வழங்கப்பட்டது என்றும் —

ஆகக்குறைந்தது ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா ஒருவருக்கு வழங்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

## தேடுதல்

வலி. தென்மேற்கு, ஜன. 16

சித்தன்கேணிப் பகுதியில் நேற்றுக் காலை படையினரின் சுற்றி வளைப்புத் தேடுதல் இடம்பெற்றது. மேலதிக விவரங்கள் செய்தி அச்சுக்குப் போகுவரை கிடைக்கவில்லை. (உ-145)

## கொள்ளையர் சிக்கினர்

விடுதலைப் புலிகள் என்ற போர்வையில் திருகோணமலை கிண்ணியா பிரதேசத்தில் களவு மற்றும் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டதாகக் கூறப்படும் குழுவொன்றைப் பொலீஸார் கைது செய்துள்ளார்கள்.

இந்தக் குழுவில் திருகோணமலை பூவரசிக்குளம் பொலீஸ்காப்பரணில் கடமையாற்றும் றிசேர்வ் பொலீஸ் அலுவலர் ஒருவரும் ஊர்காவற்படை வீரர் ஒருவரும் இன்னுமொருவரும் இருந்தனர் என்று தெரியவருகின்றது.

இவர்கள் கடந்த 2 ஆம் திகதி கிண்ணியா மஹரூவ் கிராமத்தில் கடையொன்றில் இருந்தும் 4 வீடுகளில் இருந்தும் ஒரு லட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட தங்க ஆபரணங்களைக் கொள்ளையடித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-4)

## பயிற்சி பெற்ற எழுதுவினைஞர் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜன. 16

தேசிய தொழில் பயிலுநர் அதிகாரசபை ஊடாக கல்வித்திணைக்களம், யாழ். மாநகரசபை ஆகியவற்றில் பயிற்சிபெற்ற எழுதுவினைஞர்களுக்கான பரீட்சை இம்மாதம் 18ஆம் திகதி சனிக்கிழமை முதல் நடைபெறவிருக்கின்றது.

பரீட்சைக்குத் தோற்றுபவருக்குரிய அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டுள்ளன. அனுமதி அட்டை கிடைக்காத ஒரு வருட பயிற்சியை பூர்த்தி செய்தவர்கள் உடனடியாக யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தில் தம்மைச் சந்திக்குமாறு வடக்கு-கிழக்கு பயிற்சி முகாமையாளர் ம. சிவயோகசுந்தரம் கேட்டுக் கொண்டுள்ளார்.

# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை சண்முகநாதன்
(முன்னாள் மேற்பார்வையாளர், இலங்கை வங்கி)

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சண்முகநாதன் 14-01-97 இல் தெகிவளையில் காலமானார்.

அன்னார் கந்தையா வேலுப்பிள்ளை, (இளைப்பாறிய சிறாப்பர் கிறின்லன்ட்ஸ் வங்கி), காலஞ்சென்ற சரஸ்வதி ஆகியோரின் அன்பு மகனும், உரும்பிராய் கிழக்கு, இளைப்பாறிய P.W.D. ஓவசியர், சின்னத்தம்பி இராமலிங்கம் (செல்வம்), சவுந்தரம் தம்பதிகளின் மருமகனும், பாலாம்பிகையின் அன்புக் கணவரும், தயாபரன் (லண்டன்), அனுஷா (யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்), குணாளன் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15-01-97 இல் கல்கிசை மயானத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
**சி. இராமலிங்கம்**

‘அம்பிகை பவனம்’,
உரும்பிராய் கிழக்கு. (44692)

## பொன்னுத்துரை நடராஜா

முள்ளானை, இளவாலையைச் சேர்ந்தவரும், கதிர்காமம் இராமகிருஷ்ணமடம், வெள்ளவத்தை இராமகிருஷ்ணமடம் ஆகிய விடுதிகளில் கடமை புரிந்தவருமான பொன்னுத்துரை நடராஜா 13 - 1 - 97 திங்கட்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்மா நாகமுத்து மற்றும் திருமதி பார்வதி சுப்பிரமணியம் (வீமன்காமம், தெல்லிப்பழை), திருமதி நாகம்மா வல்லிபுரம், மார்க்கண்டு (நீர்கொழும்பு), நாதன் (மல்வம், உடுவில்), காலஞ்சென்ற பூமிநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரராவார்.

அன்னாரின் பூதவுடல் 13 - 1 - 97 இல் கைதடி, அரசினர் வயோதிபர் இல்லத்தில் அடக்கம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**K, மயில்வாகனம்**
**தி. மாணிக்கவாசகர்**
(நண்பர்கள்)

இல, 10, அன்னசத்திர ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். (44701)

## குமாரசாமி பாலகுமார்

திருநெல்வேலி ஆடியபாதம் வீதியைப் (சபாகிரி, இல. 125) பிறப்பிடமாகக் கொண்ட குமாரசாமி பாலகுமார் 08 - 01 - 1997 ஆம் திகதியன்று மன்னாரில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி (ஓவசியர்) – மங்கையர்க்கரசி தம்பதிகளின் இரண்டாம் புத்திரனும், காலஞ்சென்ற ஜெயக்குமாரின் சகோதரனும், ஜெயகுமாரி (ராதை) யின் அன்புக் கணவரும், திருமதி சகிலா நவக்குமார், செல்வி ஷிராணி, செல்வன் ஷியாம்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் மன்னாரில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**வி. கு. சண்முகநாதன்**
(ஓய்வுபெற்ற ஆயுள்வேத வைத்திய அதிகாரி)
(மாமனார்)

ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.
(44707)

## திருமதி மரகதம் அருணாசலம்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மரகதம் அருணாசலம் 13-1-97 இரவு தமது இல்லத்தில் காலமானார்.

அன்னார் சோ. அருணாசலம் (ஓய்வு பெற்ற அரசாங்க உதவி அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற டாக்டர் வே. க. தம்பிப்பிள்ளை - சிவபாக்கியம் தம்பதிகளின் (மலேசியா) சிரேஷ்டபுத்திரியும், குணசேகரம் (மலேசியா) (சிரேஷ்ட கணக்காளர்), திருமதி பரமேஸ்வரி சீனிவாசகம் (சிங்கப்பூர்), டாக்டர் ஜெயம் கணேசன் (மலேசியா), த. மு. பிள்ளை (பரிஸ்ரர், லண்டன்), புனிதவதி, (கலா விற்பனர், இத்தாலி) ஆகியோரின் அருமைச் சகோதரியும், காலஞ்சென்ற கணேசரத்தினம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), திருமதி புனிதவதி விஜயரட்ணம், திருமதி திலகவதி கதிர்காமசேகரம், திருஞானசம்பந்தமூர்த்தி (உப அதிபர், குருத்தலாவ கல்லூரி) ஆகியோரின் மைத்துனியும், மு. கதிர்காமசேகரத்தின் சகோதரியும் மற்றும் திருமதி செந்தில் செல்வம் - ஜெயரட்ணத்தின் (ரொறன்ரோ, கனடா) அன்புத் தாயாரும் ஜெயரட்ணத்தின் மாமியாரும், சுபாஜினி, ரக்ஷா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் 14-1-97 இல் அன்னாரின் அளவெட்டி இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3.00 மணியளவில் பூதவுடல் அளவெட்டி பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்பட்டது.

இத்தகவலை உற்றார், உறவினர் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
**சோ. அருணாசலம்**
(கணவர்)

“யோகஸ்தான்”
அளவெட்டி மேற்கு,
அளவெட்டி. (44708)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் ஜெ.நூலகம்

# புலிகளை அடக்க முடியாவிட்டால் அவர்கள் ஏற்கக் கூடிய தீர்வு தேவை

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக தாம் முன்வைத்துள்ள தீர்வுத்திட்டத்தை (உத்தேச அரசமைப்பு திருத்தத்தை) துரிதப்படுத்த அரசாங்கம் துணிந்து விட்டதாகத் தெரிகிறது.

ஓரிரு மாதங்களில் அதனை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றி அல்லது சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அங்கீகாரத்தைப் பெற்று, அதனை அமுலாக்கப் போவதாக அரசு ஏற்கனவே அறிவித்துள்ளது.

அதற்காக தெரிவுக்குழு வாரத்திற்கு 4 அல்லது 5 கூட்டங்களை நடத்தவிருக்கிறது.

இந்த அவசரத்தைப் பாராட்டத்தான் வேண்டும். அதேவேளை இந்த அவசரம் ஏன் இவ்வளவு காலம் இருக்கவில்லை என்ற கேள்வியும் எழுகிறது.

இந்த அரசாங்கத்துக்கு மட்டுமல்ல, இதற்கு முன்னர் இருந்த அரசாங்கங்களுக்கும் இந்த அவசரம் இருக்கவில்லை.

பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசு இனப்பிரச்சினைக்கான தீர்வையும் உள்ளடக்கிய புதிய அரசமைப்பொன்றைத் தயாரிக்க தெரிவுக் குழுவொன்றை கூட்டியிருக்கிறது.

### 65 கூட்டங்கள்

இந்தக் குழு இதுவரை சுமார் 65 கூட்டங்களை நடத்தி இருக்கிறது. ஆனால் அதற்காக ஒரு வருடத்துக்கு மேல் காலம் கடத்தப்பட்டது. ஆயினும் இன்னமும் முக்கிய பிரச்சினைகளில் தெரிவுக் குழு கைவைக்க வில்லையாம்.

ரணசிங்க பிரேமதாச ஜனாதிபதியாக இருந்த போது இனப்பிரச்சினை உட்பட பல பிரச்சினைகளை தீர்ப்பதற்காகச் சர்வகட்சி மாநாடொன்று கூட்டப்பட்டது.

அந்த மாநாடும் இரண்டு மூன்று ஆண்டுகளாகக் கூடி ஒரு பயனையும் காணாது கலைந்து விட்டது.

அதே காலகட்டத்தில் மங்கள முனசிங்கவின் தலைமையில் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்று நியமிக்கப்பட்டது.

அந்தக் குழுவும் இரண்டு மூன்று ஆண்டுகளாகக் கூடி இறுதியில் பெரும்பான்மைக் கட்சிகளால் மட்டும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு தீர்வை முன்வைத்து விட்டு கலைந்து விட்டது.

இந்த மாநாடுகள், தேர்வுக் குழுக்கள் இனப்பிரச்சினையை அவ்வளவு ''சீரியஸ்'' ஆக கவனத்திற் கொண்டதாகத் தெரியவில்லை.

அநேகமாக இவை அடிக்கடி விரைவாகக் கூடி பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என முயற்சி செய்யவில்லை.

நீட்டி, முழக்கி, ஓய்வெடுத்து, சிறிய விடயங்களுக்காக விதண்டாவாதம் பேசி காலத்தைப் போக்கினவே தவிர இந்த யுத்தத்தால் மனித உயிர்கள் அழிந்து விடுகின்றனவே, எனவே சொந்த விடயங்களையும் ஒத்திப் போட்டு இந்தப் பிரச்சினையை தீர்ப்போம் என்று அவை செயற்படவில்லை.

சில வேளைகளில் சித்திரைப் புத்தாண்டுக்காக அல்லது வேறு பண்டிகைகளுக்காக ஒரு மாதத்துக்கு மேல் இந்த மாநாடுகள், தெரிவுக் குழுக்கள் கூடாமல் விடுமுறையில் இருந்தமையும் காணக் கூடியதாக இருந்தது.

அந்த நிலையில் இப்போது தெரிவுக்குழுவின் அவசரம் பாராட்டக் கூடியதே.

### ஒரு கேள்வி

ஆனால் இங்கே ஒரு பிரச்சினை இருக்கிறது. அதாவது இந்தத் தீர்வுத்திட்டம் நிறைவேற்றப்பட்டாலும் நடைமுறைப்படுத்தப்படுமா என்பதே.

கடந்த கால அனுபவத்தினால் அப்படி கேள்வி எழுப்ப வேண்டியுள்ளது.

பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினையை தீர்க்கும் முயற்சி 1984 ஆம் ஆண்டு முதல் மேற் கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வருடம் இந்த நோக்கத்துக்காக வட்ட மேசை மாநாடு ஒன்று கூட்டப்படவிருந்தது. ஏனோ அது நடைபெறவில்லை.

பின்னர் 1986 ஆம் ஆண்டு ஜனாதிபதி ஜே, ஆர். ஜெயவர்த்தனா அரசியல் கட்சி மாநாடொன்றை (பி. பி. சி.) கூட்டினார்.

மாகாண சபை என்ற அதிகார அலகு அதன் மூலம் தான் கருத்துருவம் பெற்றது.

இலங்கை—இந்திய ஒப்பந்தம், 13 ஆவது அரசமைப்புத் திருத்தம், மாகாண சபைச்சட்டம் ஆகியன மூலம் மாகாணசபை என்பது யதார்த்தமாகியது.

அந்தக்காலத்தில் இந்த மாகாண சபைக்கருத்து தங்களுடையது என்று உரிமை கூற பலர் முன்வந்தனர்.

**கொழும்பிலிருந்து வெளிவரும் "நவமணி" வார இதழில் "பாராட்டப்பட வேண்டிய அரச அவசரம்" என்ற தலைப்பில் "பிளேட்டோ" எழுதிய அரசியல் கட்டுரை மறு பிரசுரஞ் செய்யப்படுகிறது.**

முதன் முதலாக தாம் தான் அக் கருத்தை முன்வைத்தோம் என லங்கா சம சமாஜக் கட்சியின் அப்போதைய தலைவர் கொல்வின் ஆர். டி சில்வா கூறினார்.

நாமே இந்தக் கருத்தைச் சொன்னோம் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கூறியது.

அப்போது ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் அப்துல் அஸீஸ் வாழ்ந்த காலம். அவரும் இது எமது கருத்து என்றார்.

பொதுவாக இடது சாரிக் கட்சிகள் அனைத்தும் இதனை நாம் தாம் முதலில் முன்வைத்தோம் என்பதைப் போல் நடந்து கொண்டன.

இப்படி இவர்கள் சண்டையிட ஒரு காரணம் இருந்தது. அதாவது மாகாண சபை முறை வெற்றி பெறும், இதனை அமுலாக்கிக் கொண்டு போகும் போது தமிழ் மக்கள் புலிகள் இயக்கத்தைக் கைவிட்டு விடுவார்கள். மாகாண சபை முறையோடு அமைதி ஏற்படும் என்ற எண்ணமே அந்தக் காரணமாகும்.

ஆனால் நடைமுறை அப்படி இருக்கவில்லை. மாகாண சபை முறையை புலிகள் ஏற்கவும் இல்லை; மக்களை ஏற்க விடவும் இல்லை.

தமது அலுவலகங்களைத் தாமே செய்து கொள்வது தான் மாகாண சபை முறையால் தமிழ் மக்கள் எதிர்பார்த்த பயனாகும்.

### சண்டை ஓயவில்லை

ஆனால் புலிகள் சண்டையைக் கைவிடவில்லை.

வடக்கு - கிழக்குப் பகுதியில் பெரும்பாலான பகுதிகள் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களாக மாறின. அங்கு மாகாண சபை முறை இயங்கவில்லை.

மாகாணசபை முறை இயங்கிய வடக்கு – கிழக்கின் நகரப் புறங்களில் மக்கள் அந்த நிர்வாக முறை நல்லது என உணரக் கூடிய வகையில் மாகாணசபை ஆட்சியாளர்கள் நடந்து கொள்ளவும் இல்லை.

படித்து பட்டம் பெற்று நிர்வாக அதிகாரியாக மாறி, ஓர் உதவி அரசாங்க அதிபராக இருக்கும் ஒருவரைப் பார்த்து ஒரு சிறு பையன் 'டேய்' என்று ஆயுதத்தின் பலத்தால் பேசும் நிலை உருவாகி இருந்தது.

எனவே மாகாண சபை முறை நல்லது. எமக்கு புலிகளும் வேண்டாம், அவர்களின் போராட்டமும் வேண்டாம் என தமிழ்மக்கள் நினைக்கும் நிலை புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலும் இருக்கவில்லை, மாகாண நிர்வாகத்தின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் இருக்கவில்லை.

மறுபுறத்தில் மாகாண சபை முறைக்கோ அல்லது பொதுவாக அதிகாரப் பரவலாக்கல்களுக்கோ பயப்படத் தேவையில்லை என்று சிங்கள மக்கள் நினைக்கும்படிக்கு வடக்கு - கிழக்கு மாகாண நிர்வாகத்தினர் நடந்து கொள்ளவில்லை.

### தமிழீழ பிரகடனம்

ஒரு வருடத்துக்குள் தமிழீழத்தை பிரகடனப்படுத்துவதற்காக மாகாணசபையை தமிழீழ ஏற்பாட்டுச் சபையாக மாற்றும் தீர்மானம் ஒன்று 1990 மார்ச் 1 ஆம் திகதி வடக்கு – கிழக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டது

அதிகாரப்பரவலாக்கல் பிரிவினைக்கான முதல்படி என்று சிங்கள பேரினவாதிகளின் கருத்துக்கு இது உரம் போட்டது.

எனவே சில மாதங்கள் செல்லும் போது மாகாண சபை என்ற கருத்துக்கு உரிமை கோரியவர்களும் கூட புதிதாக ஏதாவது தீர்வைத் தேட வேண்டும் என்று கூறத் தொடங்கினர்.

மாகாண சபை முறையில் தவறு இருந்தமை தான் அதன் தோல்விக்கு காரணம் அல்ல. அதனை மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய புற நிலை காரணிகள் உருவாகாததே அதன் தோல்விக்குக் காரணமாகும்.

புலிகள் தொடர்ந்து போராடியதால் தீர்வுத் திட்டம் மக்களிடம் போய்ச் சேரவில்லை.

மாகாண நிர்வாகத்தினர் தீர்வுத் திட்டத்தின் பால் மக்கள் ஈர்க்கப்படும் வகையில் நடந்து கொள்ளவில்லை.

மாகாண நிர்வாகத்தினர் சிங்கள மக்களை அச்சமூட்டினார்கள்.

அரசாங்கம் முறைப்படி அதிகாரத்தைப் பரவலாக்க நடவடிக்கை எடுக்கவில்லை.

இவை தான் மாகாண சபை முறை தோல்வி அடைவதற்கான காரணங்கள்.

இந்தக் காரணங்கள் உத்தேச தீர்வுத் திட்டத்தையும் பாதிக்கக் கூடியவையாகும்.

மாகாண நிர்வாகத்தினர் முறையாக நடந்து கொண்டாலும் அரசாங்கம் முறையாக அதிகாரத்தை பரவலாக்கினாலும் புலிகள் தமது தமிழீழப் போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை.

எனவே எந்தத் தீர்வுத் திட்டமானாலும் புலிகள் அதனை ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும்.

இல்லாவிட்டால் அரச படைகளால் புலிகளை அடக்க முடிந்திருக்க வேண்டும்.

புலிகளை அடக்க முடியும் என்றால் ஏற்கனவே அது நடந்து இருக்க வேண்டும்.

எனவே' புலிகளை இணங்கச் செய்ய ஏதாவது ஒரு வழி வேண்டும். அது சர்வதேச அழுத்தமாக இருக்கலாம், சர்வதேச மத்தியஸ்தமாகவும் இருக்கலாம்.

அத்தோடு அரசாங்கம் இந்தப் பிரச்சினையில் முழு நேர்மையாக இருக்க வேண்டும்.

★

## சமாதானச் செய்தி ஒன்றுடன் ஆரியரத்தின வடக்கே வருவார்

கொழும்பு, ஜன. 16

சமாதானச்செய்தி ஒன்றை எடுத்துச் கொண்டு வடக்கு கிழக்குக்கு விரைவில் செல்ல இருப்பதாக சர்வோதயத் தலைவர் ஏ. ரி. ஆரியரத்தின தெரிவித்துள்ளார்.

அஸ்கிரிய பீடாதிபதிதலைமையில் கண்டியில் நடந்த வைபவம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மனித கொலைகள் உடன் நிறுத்தப்பட வேண்டும். மனித கொலைகள் பௌத்தத்துக்கு எதிரானவை என்றும் அவர் கூறினார்.

அதேசமயம் தென்பகுதியிலிருந்து பாதயாத்திரையாக வடபகுதி சென்று விடுதலைப் புலிகளின் தலைவர்களைச் சந்திக்கும் முயற்சி ஒன்றில் சர்வோதயத் தலைவர் ஆரியரத்தினா ஈடுபட்டிருக்கிறார் என 'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இது முற்றிலும் நாட்டில் அமைதியை ஏற்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை எனவும் அரசின் அல்லது விடுதலைப் புலிகளின் வேண்டுகோளின் பேரில் மேற்கொள்ளப்படவில்லை எனவும் ஆரியரத்ன தெரிவித்துள்ளார். (இ-10)

## ராணுவ அதிகாரி பலி

அனுராதபுரம் மாவட்டத்தில் கெப்பிட்டிக்கொலாவவில் இராணுவ ஜீப் ஒன்றை புலிகள் தாக்கினர்.

கடந்த திங்கள்இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் இராணுவ அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டார். ஓர் இராணுவ அதிகாரியும் சிப்பாய் ஒருவரும் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று பாதுகாப்பு அமைச்சின் அறிக்கை கூறுகிறது.

## அதிகாரப் பரவலாக்கல் யோசனை: உடன் அமுல் செய்யக் கோரிக்கை

### 20 தொழிற்சங்கங்கள் இணைந்து வற்புறுத்து

கொழும்பு, ஜன. 16

அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளை உடனடியாக அமுல் செய்ய வேண்டுமென்று தேசிய ஐக்கியத்துக்கான தொழிற்சங்கக் குழு அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

அரசியல் பேதங்கள் இல்லாமல் 20 தொழிற் சங்கங்கள் ஒன்றிணைந்து இந்தக் குழுவை உருவாக்கி இருக்கின்றன.

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதன் மூலமே நாட்டில் நீடித்திருக்கும் யுத்தத்துக்கு முடிவு காணமுடியும் என்றும் —

சமாதானத்தை நிலை நாட்ட முடியும் என்றும் இந்தத் தொழிற்சங்கக் குழு தெரிவித்திருக்கின்றது.

அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளை அரசாங்கம் உடனடியாக அமுல் செய்ய வேண்டுமென்று கோரி சமீபத்தில் மாத்தறை நகரில் ஒரு பேரணி நடந்தது. தேசிய ஐக்கியத்துக்கான மாத்தறை மாவட்ட உபகுழு இதனை ஏற்பாடு செய்திருந்தது.

''யுத்த அச்சுறுத்தலை முடிவுக்குக் கொண்டு வருவோம்அரசியல். தீர்வுகளுக்கு ஊக்கம் அளிப்போம்'' என்னும் தலைப்பில் நடந்த இந்த பேரணியில் அரசாங்க மற்றும் அரசாங்க சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.

அதிகாரப்பரவலாக்கல் யோசனைகள் தொடர்பாக பல் தேசிய ஸ்தாபனங்களுக்கும், அரசாங்க சார்பற்ற ஸ்தாபானங்களுக்குக்கும் விளக்கிக் கூறும் முகமாக மாத்தறையில் சென்ற வெள்ளி அன்று கருத்தரங்கு ஒன்று நடந்தது.

அரசியல் முயற்சிகளில் இருந்து ஒதுங்கியிருப்பவர்களை தேசிய பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்காக பிரதான அரசியல் நீரோட்டத்துக்குள் கொண்டு வரவேண்டுமென்று விரிவுரையாளர் சுமண சிறிலியணகே தெரிவித்தார்.

வடக்கு – கிழக்கு பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றுதான் வழியாகும் என்று அவர் மேலும் சொன்னார்.

பொதுமக்கள் தமது குறுகிய பேதங்களைக் களைந்து விட்டு அதிகாரப்பரவலாக்கல்

( 7 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உ

அல்வாய், சாமணந்தறை

## ஆலடிப் பிள்ளையார்

ஆலய பூங்காவன அதிர்ஷ்டத்துக்கான

# சீட்டிழுப்பு முடிவுகள்

14-01-1997 தைப்பொங்கல் அன்று (செவ்வாய்) பிற்பகல் 4-00 மணிக்கு மேற்படி ஆலய முன்றலில் இடம்பெற்ற அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள் வருமாறு:-

1 ஆம் பரிசு 1818
2 ஆம் பரிசு 0221
3 ஆம் பரிசு 0104

ஏனைய ஆறுதல் பரிசுகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) | 1423 | 5) | 0864 | 9) | 0477 |
| 2) | 1844 | 6) | 2828 | 10) | 1505 |
| 3) | 2306 | 7) | 0203 | 11) | 1664 |
| 4) | 0556 | 8) | 0101 | 12) | 2089 |

ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் எமது மனம் மகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

-- அல்வாயூர் இளைஞர்கள்.

(44700)

# கண்ணீர் அஞ்சலி

மன்னார் மறை மாவட்ட ஆயரும், புனித ஆசீர் வாதப்பர் ஆலயத்தின் முன்னை நாள் பங்குத் தந்தை யுமான மேதகு ஆண்டகை இராயப்பு யோசப் அவர்களின் தாயாரான

திருமதி

## இராயப்பு அந்தோனியாப்பிள்ளை

அவர்களின் மறைவையொட்டி ஆயருக்கும், அவர்தம் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்ம சாந்திக்காக எதிர்வரும் 17-01-97 வெள்ளிக்கிழமை பிற்பகல் 5-00 மணிக்கு (புதிய நேரம்) புனித ஆசீர் வாதப்பர் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

பங்குத்தந்தை, பங்குமக்கள்.

புனித ஆசீர்வாதப்பர் கோயில்,
நல்லூர். (44687)

யாழ்/ கன்னியர் மடம் மகாவித்தியாலய ஆசிரியை

## செல்வி செபஸ்ரி மேரிதிரேசா

அவர்களின் திடீர் மறைவின்

# கண்ணீர் அஞ்சலி

(மறைவு: 15 - 01 - 97)

அன்பு, பண்பு, அடக்கம், அறிவு, திறமை, ஆளுமை அத்தனையும் தன்னகத்தே கொண்ட எம் ஆசிரிய மணியே! எம் பாடசாலையில் கல்வி பயின்று பயிலகத்துக்கே உம் பணியை ஆற்றி விரைந்தோடி வந்த ஒளி விளக்கே! உம் திடீர்ப்பிரிவு எம்மையெல்லாம் திணறடித்துவிட்டதே. எம் கலையத்துக்கே பேரிழப் பாகி விட்டதே. ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு ஆண்டவனைத் தேடி ஓடி விட்ட அன்புத் திரேசா உம் ஆன்மா அவருடன் ஒன்றிவிட அனுதினமும் எம் மகத்தே நினைவுறுவோம்.

உம் பிரிவால் துயருறும்:

(44698) அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

## செல்வன் அருந்தவராஜா கிருஷ்ணா

05 - 04 - 76 இல் அன்னை மடியில் உதித்தவனே, உன் சிறு பராயத்திலேயே தந்தையின் அடியொற்றி பணி பல செய்திடப்புறப்பட்டாய். சாரணனாய் பணி பல புரிந்தாய். உன் சாந்தமே உருவான சேவை தனை சார்க் ஜம்போரியில் விகாரமகாதேவிப் பூங்காவில் காட்டியது இன்னமும் எம் கண் முன் நிற்கிறது. பரி யோவான் முதலுதவிச் சங்கத்திலும் படையிலும் தொண்டனாய் இருந்து பணி பல புரிந்து பிரிவு அதிபர் யட்சகரானாய். இன்னல்கள் பல வற்றில் உயிர்காத் தாய். ஆலயங்கள் பலவற்றில் அமைதி காத்து முதலு தவி செய்தாய். இப் பணி போதாது என இறைபணி பல ஆற்றினாய். இறைவன் உன்னை தன் பணிக்கு தன் அருகே எடுத்து விட்டான் போலும்.

பல உயிர்காத்த உன் அருகே உன் உயிர் காக்க எம்மவர் எவருமில்லையே! உன் இழப்பு எம்மவர் பணியை மென் மேலும் வலுவூட்டுவதாக அமையட்டும்.

உன் பிரிவால் துயருறும் குடும்பத்தார், உன் பணி தொடர்வோர் அனைவருக்கும் இறையருள் மூலம் சாந்தி கிட்டுவதாக. உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நா. லோஜன்,
செ. செல்வரஞ்சன்
பிரதேச ஆணையாளர்கள்,
பரி.யோவான் முதலுதவிப் படை

(44697)

## உள்ளூராட்சி உ. ஆணையாளர் அலுவலகம்

யாழ். பிராந்திய உள்ளூ ராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் கடந்த 6 ஆம் திகதி யாழ். மாநகர சபை அலுவலகத்தில் மாநகரசபை பதில் ஆணையாளர் கே. நவரத்தினராசாவால் குத்து விளக்கேற்றித் திறந்துவைக் கப்பட்டது.

கிளிநொச்சி முன்னாள் உள்ளூராட்சி உதவி ஆணை யாளர் ரி. வி. கிருஷ்ணசாமி யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளராகக் கடமையைப் பொறுப்பேற் றுள்ளார். (இ-30-173)

## யாழ். செயலக ஓய்வூதிய வவுச்சர்கள்

யாழ். பிரதேச செயலர் பிரிவு ஓய்வூதியர்களுக்கான வவுச்சர்கள் கடந்த வியாழக் கிழமை தபாலில் சேர்க்கப் பட்டதாக யாழ். பிரதேச செயலர் க. குணராசா தெரி வித்தார். (இ-30)

## புதிய அலுவலக திறப்பு விழா

வீதி அதிகார சபையின் மாகாணப் பணிப்பாளர் அலுவலகமும், பிரதமபொறி யியலாளர் அலுவலகமும் கடற்கரை வீதியில் (761 ஆம் இலக்கத்தில்) நேற்று புதன் கிழமை திறந்து வைக்கப்பட் டன.

இதுவரை மேற்படி அலு வலகங்கள் மூன்றாம் குறுக் குத் தெருவில் இயங்கி வந் தன. (அ)

## வசாவிளான் தபால்நிலையம் குட்டியபுலத்தில்

குட்டியபுலம் அரசினர் தமிழ்க்கலவன் பாட சாலைக்கு அருகில் உள்ள கட்டடத்தில் வசாவிளான் தபால் நிலையம் இம்மாதம் 4 ஆம் திகதி தொடக்கம் செயற்படுகின்றது.

பொதுமக்களுக்கான கரும பீடங்கள் எல்லாம் வழமை போல செயற்படுவதாக தபால் நிலை அதிபர் தெரி வித்தார். (இ-11)

## கர்நாடக சங்கீத நடன செய்முறை பரீட்சைகள்

ஜி. சீ. ஈ. (சா/த) 1995 விசேட பரீட்சைக்கான கர் நாடக சங்கீத நடன செயன் முறைப் பரீட்சைகள் யாழ். மாவட்டத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் நடை பெறும்.

அதிபர்கள் தங்கள் பாட சாலைக்குரிய அனுமதி அட் டைகளை 16 ஆம் 17 ஆம் திகதிகளில் தங்கள் வலயக் கல்விப் பணிமனைகளிலிருந்து சேகரித்துப் பரீட்சார்த்தி களுக்கு விநியோகிக்கும்படி கோரப்பட்டுள்ளது.

தனிப்பட்ட பரீட்சார்த்தி களின் அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பிவைக்கப் படும் எனவும் தெரிவிக்கப்பட் டுள்ளது. (இ)

**SPOKEN ENGLISH**
**By: BRITTO**

புதிய பிரிவு ஆரம்பம்:
18-01-97 (1 மணி)

புதிய உயர்கல்லூரி

(44691)

OM SRI SAIRAM

# வாணியின் மனையியல் பயிற்சிகள்

(மகளிர் மட்டும்)

புதிய வகுப்புகள் ஆரம்பம்
19-01-1997 ஞாயிறு பிற்பகல் 2-00 மணி

நேரிலும், தபால்மூலம் விண்ணப்பித்தவர்களும் மேற்குறிப்பிட்ட திகதியில் சமுகமளிக்கும்படி கேட் கப்படுகின்றார்கள்.

**Miss R. SATHIYAVANNIE,**
73, கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வு,
யாழ்ப்பாணம்.

(44682)

## தென் இந்திய திருச்சபை

யாழ். ஆதீனம்

## நம்பிக்கை இல்லம்

எமது ஆதீனத்தினால் நடத்தப்படும் உடல் ஊனமுற்றோர் (Physically Handicapped) இல்லத் துக்கான பாடசாலை மாணவருக்கு வெற்றிடமுண்டு. இதிற் சேரவிரும்பும் மாணவர்கள் 30 - 01 - 1997 க்கு முன்னதாக விண்ணப்பிக்கவும்.

திட்டப் பணிப்பாளர்.

ஆதீன காரியாலயம்
வட்டுக்கோட்டை. (சி/3931)

# கிருஷ்ணா ஒரு சேவையாளன்



## செல்வன் அருந்தவராஜா கிருஷ்ணா

கிருஷ்ணா ஒரு தசாப்தத்திற்கு மேலாக சென். ஜோன்ஸ் அம்புலன்சில் உயிர்காக்கும் பணியில் தன்னை அர்ப்பணித்தார். SAARC நாடுகளின் SCOUT JAMBOREE ல் சிறிலங்காவின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார். இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ். கிளை, வலி வடக்கு பிரிவு கிட்டாவிற்கு கொடி வார சிறப்புச் சேவைக்கு சான்றிதழ் வழங்கினார். வன்னி பெரும் நிலப்பரப்பில் முதலுதவி, சுகா தாரம், திடீர் பேரிடர்களைத் தவிர்க்கும் வகுப்புக் களை நடத்த உதவினார். மாகாண ஆணையாளர் சுகந்தன் இன்னாசித்தம்பி, பல்கலைக்கழக துணை வேந்தர் துரைராஜா, யாழ். கிளை செஞ்சிலுவை உப தலைவர் புவனேந்திரன் ஆகியோரின் இறுதி ஊர்வல அணிநடை அணியில் கலந்து சிறப்பித்தார். இளம்பிராயத்திலேயே சமுதாயத்தில் தானுமொரு வன் என்பதை உணர்ந்து நடந்தவர் கிருஷ்ணா தான்! 'வெள்ளையன்' வெள்ளைச் சீருடையில் கட மைக்கு வாருங்கள் என்று ஓடி ஓடி அப்பா அம்மா வின் படை அணிகளை திரட்டுவாரே. தன்நோய் பாராது, கண்துஞ்சாது, நேரம் ஒழுங்கு தவறாது முன்னுதாரணமாக தந்துணிவுடன் நடந்தமைக்கு 93ஆம் ஆண்டு CORPS SERGEANT MAJOR ஆக அழகனுக்கு அலங்கரிக்கும் பதவி வழங்கப்பட்டது. ஒழுக்கம், கீழ்ப்படிவு, பெற்றோர் — குருபக்தி, கூடவே தெய்வ பக்தியும் நிரம்பித் ததும்பிய என் றால் மிகையாகாது. இவரின் இடத்தை நிரப்புவது யார்? இனி யார்? எங்களை வழி நடத்த, அவர் பணி தொடர இரண்டறக் கலந்தாரே. அதில் ஐயமே யில்லை. யாழ். I. C. R. C. வதிவிட பிரதிநிதிக்கும், கொழும்பிலிருந்து உதவிய யசோ குடும்பத்தினருக் கும், V. T. சிவலிங்கம் குடும்பத்தினருக்கும் படை சார்பில் நன்றி பகர்கின்றோம்.

வலிகாமம் வடக்கு கிழக்கு, யாழ்., நல்லூர் வலி. தென்மேற்கு, வடமராட்சி, தென்மராட்சி, தீவகப் பிரதேசங்கள்வின்.

சர்வதேச சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினர்

[9174]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் - பலஸ்தீன தலைவர்கள் ஹெப்ரோன் உடன்பாட்டில் ஒப்பம்

லீமா, ஜன. 16

டெல் அவ்வில், ஜன. 16

இஸ்ரேலும் பலஸ்தீன விடுதலை இயக்கமும் மேற்குக் கரை நகரமான ஹெப்ரோனுக்கு பலஸ்தீன தன்னாட்சியை விரிவுபடுத்துகின்ற ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன.

இந்த ஒப்பந்தத்தில் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெத்தானியாகுவும்பலஸ்தீன அதிபர் யசீர் அரபாத்தும் நேற்றுகாலையில் கையெழுத்திட்டனர்.

இஸ்ரேலிய பிரதமரும், பலஸ்தீன அதிபரும் காஸாவின் எல்லைச்சாவடியான ஹேரேஸ் என்ற இடத்தில் பேச்சுக்களைத் தொடங்கி 2 மணி நேரத்துக்குள் இணக்கம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐரோப்பிய, அமெரிக்க, அரபு பேராளர்கள் மத்தியில் இந்த ஒப்பந்தம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை உத்தியோக பூர்வமாக கைச்சாத்தாகும் என்று பலஸ்தீன பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இன்னும் 10 நாள்களில் ஹெப்ரோனின் 80 சதவீதப் பகுதிகளிலிருந்து இஸ்ரேலிய இராணுவத்தினர் வெளியேற இந்த ஒப்பந்தம் வகைசெய்யும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த ஒப்பந்தம் கைச்சாத்தானதை அடுத்து அமெரிக்க அதிபர் கிளின்ரன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இஸ்ரேலிய – பலஸ்தீன தலைவர்களைப் பாராட்டினார்.

ஜோர்தான் மன்னர் ஹுசேய்ன் எகிப்திய அதிபர் ஹொஸ்னி முபாரக் ஆகியோர் இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையில் சமரசம் செய்து வைப்பதில் முன்னின்று உழைத்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-5)

## பெரிக்கு அதி உயர் விருது

அமெரிக்க பாதுகாப்பு அமைச்சராகப் பணிபுரிந்து தற்போது பதவிதுறக்கும் வில்லியம் பெரிக்கு அதிபர் பில் கிளின்ரனால் சிறப்பு விருது ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில்மிகஉயர்ந்த சிவிலியன் விருதான ''சுதந்திரத்துக்கான அதிபர்'' என்ற விருதே வில்லியம் பெரிக்கு வழங்கப்பட்டது. (இ-5)

## சுரங்க ரயில் ஊழியர்கள் வேலை நிறுத்தம்

கோல், ஜன. 16

தென்கொரியாவில் ஆயிரக் கணக்கான சுரங்க ரயில் ஊழியர்கள் நேற்று முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நாள்தோறும் 40 இலட்சம் பயணிகளை ஏற்றிச் செல்லும் சோல் சுரங்க ரயில் சேவை தற்போது பகுதிநேர ஊழியர்களால் நடத்தப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-5)

## பலூனில் உலகம் சுற்றும் முயற்சி தோல்வி

பேர்ன், ஜன. 16

இராட்சத பலூனில் உலகம் முழுவதையும்சுற்றி வர சுவிட்சர்லாந்து, பெல்ஜியம் நாடுகளைச் சேர்ந்த இரண்டு வீரர்களின் முயற்சி நேற்று முன்தினம் தோல்வியில் முடிந்தது.

அல்ப்ஸ் மலைச் சிகரப்பகுதியில் இருந்து உயரப் பறக்கத்தொடங்கிய இந்த பலூன் தொழில் நுட்பக் கோளாறு காரணமாக சிறிது நேரத்தில் மத்தியதரைக் கடலில் விழுந்தது.

அதிர்ஷ்டவசமாக பலூன் கடலில் வீழ்ந்ததால் அவர்கள் உயிர் தப்பினார்கள். நிலப் பரப்பில் விழுந்திருந்தால் தப்பியிருக்க வாய்ப்பில்லை எனச் செய்தியாளர்கள் தெரிவிக்கிறார்கள். (இ-10)

## சவூதியில் பிச்சை எடுத்த 77 இந்தியச் சிறுமியர்கள்!

### நாடு கடத்தப்பட்டனர்!!

புதுடில்லி, ஜன. 16

சவூதி, அரேபியாவில் பிச்சை எடுப்பதில் ஈடுபட்டிருந்த 77 இந்தியச் சிறுமியர்களை சவூதி அரேபிய அரசாங்கம் நாடு கடத்தியுள்ளது.

அங்கு கைவிடப்பட்டு இருந்த இந்த சிறுமியர்களிடம் பிரயாணப்பத்திரங்கள் எதுவும் இருக்கவில்லை என்று பம்பாய் பொலீஸார் தெரிவித்தனர்.

சவூதி எயர் லைன்ஸ் விமானம் ஒன்றிலேயே இந்த 77 சிறுவர்களும் பம்பாய்க்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (இ-5)

## உலகின் நான்காவது மாசு படிந்த நகரம்

புதுடில்லி, ஜன. 16

'உலகின் நான்காவது மாசு படிந்த நகர்' என்ற பெயரை இந்தியத் தலைநகர் புதுடில்லி பெற்றுள்ளது.

நகரில் சுமார் இரண்டு இலட்சம் வாகனங்களும் ஆயிரக் கணக்கான தொழிற்சாலைகளும் தினமும் சுமார் இரண்டாயிரம் தொன் எடை கொண்ட விஷ மாசுகளை புதுடில்லி நகர் வெளியில் பரப்புகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிட்டால் பெரும் நோய்கள் புதுடில்லி மக்களைத் தாக்கும் அபாயம் இருப்பதாக நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். (இ-5)

## நான்காவது வாரமாகத் தொடரும் பெரு பணயக் கைதிகள் பிரச்சினை

பெருவில் நான்காவது வாரமாகத் தொடரும் ஜப்பானிய தூதரக பணயக் கைதிகள் பிரச்சினையைத் தீர்ப்பதில் அதிபர் அல்பேட்டோ பூஜிமோறி தெளிவான கொள்கையையும், அணுகுமுறையையும் கொண்டிருக்கவில்லை எனக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

பணயக்கைதிகளைப் பிடித்துள்ள போராளிகளின் தலைவரான நெர்தோர் செர்பாக் கார்த்தலோனி புத்திசாதுரியமாக நடந்து கொண்டு சர்வதேச நல்லெண்ணத்தைப் பெற்றுள்ளார்.

அவர் பெற்றுள்ளநல்லெண்ணத்தில் நான்கில் ஒரு பங்கைக் கூட பூஜிமோறியின் அரசு பெறவில்லை என பெரு நாட்டுப் பத்திரிகைகள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளன. (இ-10)

# அரசின் இருமுனைத் தந்திரோபாயம் வெற்றி அளிக்கப் போவதில்லை

பரந்தன் -- ஆனையிறவு தாக்குதல்கள் குறித்து ரோய்ட்டர் செய்தியாளரின் அரசியல் விமர்சனத்தின் தொகுப்பு இது.

இராணுவத்தினர் கெரில்லா யுத்தத்தில் தோல்வியடைந்து கொண்டிருப்பது, அரசு மேற்கொண்டுள்ள அரசியல் தீர்வு முயற்சியில் விடுதலைப் புலிகள் பங்குபற்ற மாட்டார்கள் என்பதையே உணர்த்துகிறது.

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் தாம் வெல்ல முடியாத படைப்பலத்தை வைத்திருக்கிறார் என்பதை பரந்தன் தாக்குதல் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

''விடுதலைப் புலிகள் சோர்ந்து விட்டார்கள்; இராணுவத்தால் அவர்கள் அழிக்கப்பட்டு விட்டார்கள்'' என்று கூறிவந்தது அரசு. ஆனால் அது பொய்யானது என்பது தற்போது நிரூபிக்கப்பட்டுள்ளது.

சரியான நேரத்தில், சரியான இடத்தைத் தெரிவு செய்து படைகளை ஒன்று திரட்டி தீர்க்கமான தாக்குதலுக்கு அனுப்பக் கூடியவராக பிரபாகரன் இருக்கிறார்.

பலமான நிலையில் புலிகள் இருந்து கொண்டு, அரசுடன் பேச்சு நடத்துவதற்கு அரசு அனுமதிக்கத் தயாராக இல்லை போல் தெரிகிறது என்று பெயர் கூறவிரும்பாத வடபகுதி சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஒரு புறம் புலிகளைப் பேச்சுக்கு வருமாறு நெருக்குவதும், மறுபுறத்தில் தமிழ் மக்களுக்கு சுயாட்சி வழங்குவதாக தெரிவிப்பதுமான இரு முனைத்தந்திரோபாயம் இராணுவரீதியில் புலிகள் பலமாக உள்ளவரை வெற்றியளிக்கப் போவதில்லை என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

போதிய ஆட்பலம், ஆயுத பலம் இல்லாமை, —

படையினருக்கு மனோதைரியம் போதாமை, —

தலைமைத்துவ பலவீனம், —

தெளிவான அரசியல் வழிநடத்தல் இல்லாமை, —

ஆகியன காரணமாக 14 வருட யுத்தத்தை இராணுவத்தால் வெற்றிகரமாக நடத்த முடியவில்லை.

பரந்தனில் இராணுவத்தினர் ஆட்டிலறிகளை இழந்தமை பாதுகாப்பு செலவீனத்தை கட்டுப்படுத்த முடியாத நிலையை உருவாக்கியுள்ளது.

பொருளாதாரத்தை பலவீனப்படுத்தி, யுத்த செலவை அரசு தாங்க முடியாத நிலையை உருவாக்குவதுதான் பிரபாகரனின் தந்திரங்களில் ஒன்றாகும் என்று பிரபல விமர்சகர் தயான் ஜெயதிலகா தெரிவித்தார். (இ-3-150)

## தடை

பளைப் பகுதியில் உள்ள தென்னந்தோட்டங்களில் தோட்ட உரிமையாளர் அல்லது பராமரிப்பாளர் தவிர்ந்த ஏனையோர் தேங்காய்கள் பறிப்பது கடந்த திங்கட்கிழமை முதல் தடை செய்யப்பட்டுள்ளது.

இத்தடையை மீறுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென தென்னந்தோட்ட உரிமையாளர் சங்கத்தினர் ஒலிபெருக்கி மூலம் அறிவித்துள்ளனர்.

## பருத்தித்துறை, சாவகச்சேரிக்கு விரைவில் தொலைபேசி வசதி

பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய இடங்களுக்கும் தொலைபேசி வசதி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள பிரதான தபாலகங்களில் தொலைபேசி இணைப்புக்கள் ஏற்படுத்தப்பட உள்ளன.

வடக்கு, கிழக்கு மாகாண ரெலிகொம் பிரதிப் பொது முகாமையாளர் கனகசூரியர் எடுத்துக் கொண்ட நடவடிக்கையினால் தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்படவுள்ளன. (இ-173)

## அஷ்ரப் மன்னிப்புக் கோரினால் ரூ. 50 கோடி வழக்கு வாபஸ்

### பௌத்த சம்மேளனம் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 16

''தீகவாபி விவகாரம் குறித்து புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு எம்.எச்.எம். அஷ்ரப் மன்னிப்புக் கோரவேண்டும். மன்னிப்புக் கோரினால் 50 கோடி ரூபா நஷ்டஈடு கோரும் வழக்கை தாக்கல் செய்வதை நிறுத்தி வைப்போம்.''

அகில இலங்கை பௌத்த மகாசம்மேளனம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அமைச்சருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய தேவையான ஏற்பாடுகள் யாவும் தயார் நிலையில் உள்ளன.

அமைச்சர் மன்னிப்புக் கோரினால் வழக்கு தாக்கல் செய்யப்படமாட்டாது என்று பௌத்த மகாசம்மேளனத் தலைவர் [illegible] தெரிவித்தார். (இ-3-150)

## உரும்பிராய்ப் பகுதியில் 3 கோயில்களில் திருட்டு

### திங்கள் இரவு சம்பவம்

ஒரே இரவில் மூன்று கோயில்களில், திருடர்கள் தயது கைவரிசையை காட்டியுள்ளனர்.

உரும்பிராய் வடக்கிலுள்ள பேய்ச்சியம்மன் கோயில், ஸ்ரீ காமாட்சி அம்பாள் கோயில், சிவன் கோயில் ஆகியவற்றிலேயே பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

கடந்த திங்கட்கிழமை இரவு இச்சம்பவம் இடம் பெற்றது.

பேய்ச்சியம்மன் கோயிலில் கதவை உடைத்துத் திறந்தும் —

ஏனைய கோயில்களில் ஓட்டைக் கழற்றி உள்நுழைந்தும் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டி உள்ளனர்.

ஸ்ரீகாமாட்சி அம்பாள் ஆலயத்தில் பொங்குவதற்கென வைக்கப்பட்டிருந்த அரிசி, சர்க்கரை முதலிய பொருள்களும் திருடப்பட்டுள்ளன.

## கட்டாக் காலிகள்

அச்சுவேலிப் பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்து வருகிறது.

தோல் நோய்களுடன் கூடிய கட்டக்காலி நாய்கள் பெருமளவில் அலைந்து திரிவதால் பொது மக்கள் போக்குவரத்தின் போது அஞ்ச வேண்டி உள்ளதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

நல்ல நிலையிலுள்ள EN-7914 இலக்க A - 30 காரும், EN - 9606 இலக்க A - 50 கேம்பிறிட்ச் காரும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு :- யோகராஜா, ரயர்கடை, மந்திகை, பருத்தித்துறை. (44648)

பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கு முன்புறமாகவும், சிவன் கோயிலுக்கு அருகாமையிலும், பிரதான வீதியில் அமைந்துள்ள மூன்று கடைகளைக் கொண்ட கட்டடத் தொகுதி விற்பனைக்குண்டு. சேர்த்தோ அல்லது தனித்தனியாகவோ பெற்றுக் கொள்ளலாம். ப. இந்திராணி, இரும்பு மதவடி, வதிரி. தொடர்பு: த. நந்தகுமார், கிராமசேவையாளர், பருத்தித்துறை. (சி-3992)

**பழைய புத்தகங்கள்**

பழைய பாடசாலைப் புத்தகங்கள், தமிழ் / ஆங்கில நாவல்கள் மற்றும் சகல விதமான புத்தகங்கள் வாங்கவும், விற்கவும் புதிய வெளியீடுகளான ஆண்டாள் திருப்பாவை, குயில் பாட்டு, கானல் வரி, கும்பகர்ணன் வதைப்படலம் பெற்றுக் கொள்ளவும். பாலன் புத்தக நிலையம், 87, சிவன் வடக்கு வீதி, யாழ்ப்பாணம். (வைத்தீஸ்வராக் கல்லூரி அருகில்) (44597)

**தவறிவிட்டது**

சொக்கலிங்கம் சாரதாதேவி ஆகிய எனது 656802863 V இலக்கம் கொண்ட இராணுவ அடையாளஅட்டை 13-1-97 இல்கொக்குவில் ஆஸ்பத்திரிக்கும், கொக்குவில் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கொக்குவில் சந்தியிலுள்ள காவேரி மருந்தகத்தில் ஒப்படைக்கவும். (44688)

தங்கவேல் கிருஸ்ணவேணி அடையாள அட்டை 778449255 V, பாஸ் கைப்பேஸ் கொடிகாமம் வீதிக்கும், சாரையடிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். கீதா, கொடிகாமம் வீதி, புலோலி தெற்கு, புலோலி. சுருணலட்சுமி ஆடையகம், பருத்தித்துறை. (44677)

14-01-97 அன்று சிவன் வீதியிலுள்ள பவானி விளையாட்டுக் கழகத்துக்கும், கன்னாதிட்டி வீதியூடாக வெலிங்டன் சந்திக்குமிடையில் கைக்குட்டையில் முடிந்தபடி ஒரு பவுண் மோதிரம் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் எஸ். வீ. விக்கிரமசிங்கம் யாழ். மத்திய கல்லூரியில் ஒப்படைக்கவும். (44693)

**ஆண்டு 4 - 11**

புலமைப்பரிசில் ஆண்டு 5 (தமிழ், கணிதம், ஆங்கிலம்), மற்றைய வகுப்புக்களுக்கு ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் உயர்ந்த பெறுபேறுடைய Lond. Inter ஆசிரியரால் கற்பிக்கப்படும். 85, சிவன் கோயிலடி, (சிவன் கோயில் மேற்கு வீதி) திருநெல்வேலி. (44695)

**ஆங்கிலம்/சிங்களம்**

அடிப்படை ஆங்கிலம்/ மாதாந்த பரீட்சைகள் உட்பட க. பொ. த. சா/த '97, ஆங்கிலம் பகல் 11. 00 மணி வகுப்புகள் உடன் ஆரம்பமாகின்றன. சிங்களம் பகல் 10. 00 மணி. T.சகாதேவன், இல. 46, பிரப்பங்குளம் லேன், வண்ணார்பண்ணை. (44694)

---


மாதகல்
புனித. செபஸ்தியார் ஆலய
# பெருவிழா

இம்மாதம் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படும். அன்று காலை 8-00 மணிக்கு திருவிழா திருப்பலியும், திருச்சுரூப பவனியும் இடம் பெறும். நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் சொந்த இடத்தில் திருவிழா இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

அருட்திரு. யேம்ஸ் சிங்கராசா

(44690)



# SAI INSTITUTE
[ மானிப்பாய் மகளிர் கல்லூரி முன்பாக]
மானிப்பாய்
## SPOKEN ENGLISH AND G. A. Q. [ENGLISH] CLASSES
By: A. BRITTO

புதிய பிரிவு ஆரம்பம்:- 18 - 01 - 1997
சனி — 2. 30 p. m

(44689) - நிர்வாகி


---

# கண்ணீர் அஞ்சலி

நுணாவில் கிழக்கு கிராம அலுவலர்
**திரு. வைத்தியலிங்கம் துரைசிங்கம்**
அவர்களின் அன்புத் தந்தையாராகிய
**சி. வ. வைத்தியலிங்கம்**

அவர்கள் 17-12-1996ஆம் திகதி இறைவனடி சேர்ந்ததையிட்டு அவரது குடும்பத்தாருக்கு எமது சங்கம் சார்பாக கண்ணீர் அஞ்சலியை செலுத்துவதுடன் அவரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலக ஊழியர்,
நலன்புரிச் சங்க அங்கத்தவர்கள்.

பிரதேச செயலகம், தென்மராட்சி,
சாவகச்சேரி. (சி/3929)

---

# கண்ணீர் அஞ்சலி

எமது திணைக்கள உத்தியோகஸ்தர்
**திரு. த. செ. சிவசுப்பிரமணியம்**
அவர்களுடைய தாயாரான
**திருமதி செல்லத்துரை சின்னம்மா**

அவர்களது மரணத்தால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். விலைமதிப்பீட்டு திணைக்கள ஊழியர்களும்,
நலன்புரிச் சங்கமும்.

148, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (9172)

---

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



ஆண்டவன் படைப்பில்: 19 — 03 — 1948

ஆண்டவன் அழைப்பில்: 16 — 01 — 1994

திருமதி
**இராமச்சந்திரன் செல்வராணி**
**(லீலா)**
திதி: 16-01-1997

அம்மா! நீங்கள் மறைந்து மூன்றாண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவுகள் எம் உயிர் உள்ளவரை அழியாத சுவடுகள்.

உங்கள் நினைவுகளுடன்:
கணவர், பிள்ளைகள்.

க. இராமச்சந்திரன்,
அனலைதீவு -6. (9156)

---

# தென் இந்திய திருச்சபை
**யாழ். ஆதீனம்**
**நம்பிக்கை இல்லம் (House of Hope)**

எமது ஆதீனத்தினால் நடத்தப்படும்
உடல் ஊனமுற்றோர் (PHYSICALLY HANDICAPPED)
இல்லத்திற்கு பிள்ளைகளை வழிநடத்துவதற்கான
**பாதுகாவலர் (WARDENS) தேவை.**
இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

**தகைமைகள்:**

1) க. பொ. த. (சாதாரணம்) சித்தி அடைந்தவராக இருக்க வேண்டும்.
2) சகல பொறுப்புக்களையும் கொண்டு நடத்தும் திறன் உடையவராக இருக்க வேண்டும். குடும்பப் பொறுப்பு அற்றவராக இருக்க வேண்டும்.
3) 30 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.
4) சபைக் குருவின் சிபார்சுக் கடிதம் இணைக்கப்படவேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி: **20 - 01 - 1997**

சம்பளம்: உணவு, இருப்பிட வசதியுடன் குறைந்த பட்சம் ரூபா 3000/-

**திட்டப் பணிப்பாளர்.**

தென் இந்திய திருச்சபை,
வட்டுக்கோட்டை. (சி-3930)

---

# LIONS CLUB OF VADAMARADCHY
## வடமராட்சி லயன்ஸ் கழகம்
# கண் சிகிச்சை முகாம்

வடமராட்சி லயன்ஸ் கழகம் 19-01-1997ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8-00 மணி தொடக்கம் கண் சிகிச்சை முகாம் ஒன்றை மந்திகை ஆதார வைத்தியசாலையில் (Base Hospital, Point Pedro) நடத்த உள்ளது. வைத்திய நிபுணர்களினால் கண் பரிசோதனை செய்யப்படும். கண் விழிப்படல சத்திர சிகிச்சை (Cataract Operation) செய்ய வேண்டியவர்களுக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும். இதற்கு வேண்டிய கண்ணாடிச் சில்லுகளும் (Intra Ocular Lenses) கண்பார்வையைப் பெறுவதற்குத் தேவையான மூக்குக் கண்ணாடிகளும் லயன்ஸ் கழகத்தால் இலவசமாக வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கண் பரிசோதனையுடன் வேறு பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படும்.

கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள மக்களுக்கு இந்த ஒழுங்குகளை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

இந்த உதவியைப் பெற விரும்புவோர் நேரிலோ, எழுத்துமூலமாகவோ பின்வரும் முகவரிகளில் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துப் பதிவு செய்து கொள்ளவும்.

லயன். என். சோமசுந்தரம்,
கழகச் செயலாளர்,
நகராட்சி மன்றம்,
பருத்தித்துறை.

லயன். சு. தணிகாசலம்,
கழகத் தலைவர்,
நாவலர் மடம்,
நவிண்டில்,
கரவெட்டி.

(44635)

---

# 14 ஆம் வருட நினைவஞ்சலி



பிறப்பு: 24 — 04 — 1918

இறப்பு: 16 — 01 — 1983

**அமரர் யோன் பிலிப் யோசேப்**
(உரிமையாளர் றோஸ் ஆர்ட் ஸ்ருடியோ)

''மரணமும் பாவமும் வென்றவனே
மனுக்குலம் காத்த மாதவனே
மரித்தவர் தஞ்சம் ஆடுவாய்
மாண்புயர் வானில் சேர்த்திடுவாய்.''

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

33/14, அடப்பன் வீதி,
யாழ்ப்பாணம். (44654)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண நல்லூர் ஓர் நூலகம்

# உதயன்

## பூந்தி ஓடும் முயற்சிகள்

ஸ்ரீலங்காவின் அரசமைப்புச் சட்டத்தில் பௌத்த மதத்துக்கு அனேகமாக அரசாங்க மதம் என்றளவுக்கான அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

அரசமைப்புச் சட்டப் பிரகாரம் பௌத்த மதத்தைப் பேணுவதும் வளர்ப்பதும் அரசாங்கத்தின் கடமைகள். அந்தக் கடமைகளைச் செய்வதற்கு உதவும் பொருட்டு பௌத்த சாசன அமைச்சில் ஆலோசனைச் சபை ஒன்று நிறுவப்படுவது வழக்கம்.

மேற்படி ஆலோசனைச் சபையின் நிரந்தர உறுப்பினர்களான மல்வத்தை, அஸ்கிரிய மகாநாயக்கர்கள் அதிலிருந்து விலகிவிட்டனர். அவர்களைத் தொடர்ந்து ஆலோசனைச் சபையில் அங்கம் வகித்த ஐக்கிய தேசியக் கட்சி எம்.பிக்களும் இராஜினமாச் செய்து விட்டனர்.

பௌத்த சிங்கள மக்களுக்கு எதிராக நடைபெறும் பல்வேறு நடவடிக்கைகளையும் தடுப்பதற்கு இந்த ஆலோசனைச் சபை எவ்வித ஏற்பாடும் செய்யவில்லை என்பதே, பதவி விலகல்களுக்கு முன்வைக்கப்படும் காரணமாகும்.

பாதிப்புகள் நிகழ்ந்திருப்பின், அவ்வப்போது சுட்டிக்காட்டி,உகந்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று எடுத்துக் கூறி உடனுக்குடன் தமது பதவிகளை இராஜினாமாச் செய்திருக்க வேண்டும்.

இப்போதைய பதவி விலகல்கள் உள்நோக்கம்கொண்டவை என்பது நன்றாகத் தெரிகின்றது. அதாவது அரசியல் நோக்கம் கொண்டது என்பது தெளிவாகிறது.

அரசாங்கம் கொண்டு வர உத்தேசித்துள்ள அதிகாரப் பரவல் திட்டத்தைத் தடுப்பதற்காக, பௌத்த- சிங்கள மக்களிடையே ஓர் எதிர்ப்பலையை உருவாக்குவதற்கான முயற்சி இது.

குறிப்பாக, அதிகாரப் பரவல் திட்டம் குறித்து அரசு சர்வஜன வாக்கெடுப்பை நடத்தவிடாது தடுப்பதற்கான முன்னேற்பாடு என்றும் சொல்லலாம்.

பௌத்த- சிங்கள மக்களுக்கு எதிராக அரசு செயற்படுகிறது என்ற உணர்வை ஊட்டினால், சர்வஜன வாக்கெடுப்பு அரசுக்குத் தோல்வியாக முடியும்.

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குப் பலம் இல்லாத தனது பலவீனத்தை வெளிக்காட்டாமல், சரி செய்வதற்கு அரசாங்கம் முந்திக் கொள்ளப் பார்க்கிறது.

ஆனால் அதனையும் ஒரு வெட்டு வெட்டி முந்திக் கொண்டு ஓட ஐக்கிய தேசியக் கட்சிமுயல்கின்றது; பௌத்த பீடங்களின் பேருதவியோடு.

பௌத்த சாசன ஆலோசனைச் சபையிலிருந்து முதலில் மகாநாயக்கர்களை விலக ஊக்கமளித்து, அதனைத் தொடர்ந்து தனது கட்சி உறுப்பினர்களை இராஜினாமாச் செய்ய வைத்திருக்கிறது!

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண எடுக்கப்படும் முயற்சி எதுவானாலும் பௌத்த சிங்கள மக்களின் உரிமைகளைப் பாதிப்பதாக எடுத்துக்கூறி,அந்த முயற்சி தடுக்கப்படுவது இந் நாட்டின் சரித்திர வழக்கம் அதனைத்தடுக்க சந்திரிகாவால் முடியுமா என்பது சந்தேகம் தான்!

# வடக்கு - கிழக்கு பகுதிக்கு சிவில் நிர்வாகம் வேண்டும்

## ஆளுநர் காமினி பொன்சேகா சொல்கிறார்

கொழும்பு, ஜன. 16

வடக்கு - கிழக்கில் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்கவும் —

அபிவிருத்திச் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டவும்— சிவில் நிர்வாகம் அல்லது அரசியல் நிர்வாகம் ஒன்று ஏற்படுத்தப்படவேண்டும்.

இப்படிக் கோரியுள்ளார் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் காமினிபோன்சேகா.

கொழும்பில் இருந்து வெளிவரும் ''நவமணி'' பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போதுள்ள மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரப் பரவலாக்கல் கொள்கை சிதைக்கப்படாமல் பாதுகாக்கப்பட வேண்டும். இதற்காக இம் மாகாணங்களில் சிவில் அல்லது அரசியல் நிர்வாகம் ஏற்படுவதை அரசு துரிதப்படுத்த வேண்டும்.

வடக்கு -கிழக்கில் நிர்வாக அமைப்பு சட்ட ரீதியாக இல்லாத நிலையே நிலவுகிறது.

இதன் காரணமாக, மக்களுக்கும், நிர்வாகத்துக்கும் இடையில் பாரிய வெற்றிடம் உள்ளது. இது ஆளுநரின் பணியை வெகுவாகப் பாதித்துள்ளது. மலசல கூடத்தில் தண்ணீர் இல்லை என்றாலும் ஆளுநரே அந்த விடயத்தை கவனிக்க வேண்டியுள்ளது.

பிரதேச மட்டத்தில் தீர்க்கக்கூடிய பிரச்சினைகளை அங்கேயே தீர்க்கக்கூடிய அரசமைப்பு அதிகாரங்களைச் செயற்படுத்தவேண்டும்.

கொழும்பில் இருந்து மாகாண சபையைக் கட்டுப்படுத்த முடியாது. மாகாணங்களுக்குத் தேவையான நிதி வசதியை அந்த அந்த மாகாணங்கள் பெற்றுக்கொள்ள வகை செய்யப்படவேண்டும்.

ஆனால் இன்று நிலவுவதோ அதற்கு மாறானவை. நிதி கொடுப்பதும், பங்கீடு செய்வதும், கொள்கை நிர்ணயிப்பதும், விதிகளை ஆக்குவதும் மத்திய அரசின் அமைச்சே.

மாகாண சபைகளை உருவாக்கி அதிகாரப்பரவலாக்கலை மேற்கொள்ளவேண்டும் என்ற நிலையில், இத்தகைய செயற்பாடுகள் மூலம் அம்மாகாணங்களுக்கு நியாயம் கிடைக்கிறதா என்பது கேள்விக்குறி ஆகும்.

கொழும்பில் இருந்து கொண்டு மாகாணங்களைக் கட்டுப்படுத்தும் செயற்பாடு தொடர்ந்தும் காணப்படுமாயின், அதிகாரப் பரவலாக்கலைக் கொண்டுவருவதில் அர்த்தமில்லை.

ஒரு கையால் அதிகாரப் பரவலாக்கலைக் கூறிக்கொண்டு மறுகையால் மூக்கணாங் கயிற்றைப் பிடித்துக்கொண்டிருக்கும் நிலைமாறாவிடில் மாடு எங்கே போகும்?

இந்த ''றிமோட் கொண்ட்ரோல்'' நிர்வாகம் வடக்கு -கிழக்கு மாகாணசபைக்குத் தேவையில்லை. அப்படி இல்லாவிடின் அதிகாரப் பரவலாக்கல் தோல்வியிலே முடியும்.

மிகவும் கஷ்டமும், சங்கடமும் நிலவும் சூழ்நிலையில் ஆளுநராகக் கடமையாற்றும் அதேநேரம் ஆளுநருடைய கடமைகள், பொறுப்புக்களை எமது அரசமைப்பு தெளிவாக வரையறுத்துக் கூறவில்லை என்பதையும் சுட்டிக் காட்டவேண்டும். எனது கடமை, பொறுப்பு எது என்பது எனக்கு இன்னும் புரியாத நிலையே காணப்படுகிறது.

வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கு முதலில் யுத்தம் நிறுத்தப்பட வேண்டும், அதன் பின் அபிவிருத்திக்கான அத்திவாரம் இடப்பட வேண்டும்.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-150-3)

## விண்ணப்ப திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 16

தமிழ், சிங்கள, ஆங்கில சுருக்கெழுத்தாளர் சேவைகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கான (1996) விண்ணப்பங்களைக் கோரும் தினம் 25-01-1997 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதென யாழ். செயலகத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இதற்கான கட்டணத்தை தபாலகத்தில் காசுக்கட்டளை மூலம் பெற்று விண்ணப்பத்துடன் யாழ். அரச அதிபருக்கு அனுப்பலாம். விண்ணப்பப்படிவங்கள் தேவைப்படின் செயலகத்தில் தாபனக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம் — என்று யாழ். மேலதிக அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (அ)

## சந்தேக நபர் கைது

வலி, தென் மேற்கு ஜன. 16

உடுவில் கம நல சேவை நிலையத்தில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் சம்பந்தமாக ஒருவர் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதனால் சந்தேகநபர் மீது தொடர்ந்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பிரஸ்தாப கம நல சேவை நிலைய அலுவலகத்திலிருந்து ஒருதொகுதி உரம், உருளைக் கிழங்கு, கிருமிநாசினி வகைகள் அண்மையில் திருடப்பட்டிருந்தன. (அ-145)

## விஸ்வமடுச் சம்பவத்தில்

# பலியானோர் மற்றும் காயமுற்றோர் விவரம்

கொழும்பு, ஜன. 16

கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு விஸ்வமடு 10 ஆம் கட்டைப் பகுதியில் இடம்பெற்ற விமானக் குண்டுத் தாக்குதலில் மூன்று பொது மக்கள் பலியானது குறித்தும் 13 பேர் காயமடைந்தது குறித்தும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சிக் கிளைக்கு அறிவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பண்டத்தரிப்புப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து விஸ்வமடுவில் தங்கியிருந்த மதுமதி திருச்செல்வம் (வயது 40), சாந்தையைச் சேர்ந்தவர்களான சரவணைக் குஞ்சி (வயது 50), அவரது மகனான சரவணை ரஞ்சித் ஆகியோரே உயிரிழந்தவர்கள் ஆவர்.

திருச்செல்வம் (வயது 40), இராஜேந்திரம் மதி (வயது 17), இராஜேந்திரம் ராசா (வயது 40), மார்க்கண்டு பாஸ்கரன் (வயது 30), கந்தையா ஜெயக்குமார் (வயது 29), ஜெயக்குமார் ஜெயா (வயது 25), தங்கராசா ராசம்மா (வயது 50), கந்தையா தங்கராசா (வயது 55), தங்கராசா மாலா (வயது 12), வேலன் சரவணை (வயது 52) சரவணை இராமச்சந்திரன் (வயது 18), சரவணை இராமகிருஷ்ணன் (வயது 13), நிர்மலா (வயது 30) ஆகியோரே இச்சம்பவத்தில் காயமடைந்தவர்களாவர். (உ-5)

# காணாமற் போனோர் குறித்து விவரங்களின் பதிவு ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 16

குடாநாட்டில் காணாமற் போனவர்கள் தொடர்பான பதிவுகளை ஈ.பி.டி.பியின் யாழ். அலுவலகம் மேற்கொண்டு வருவதாக அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

தினமும் ஏராளமானவர்கள் இந்த அலுவலகத்துக்கு வந்து படிவங்களில் காணாமற் போனவர்கள் தொடர்பான விவரங்களைப் பதிந்து வருகிறார்கள்.

இதுவரை நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் இவ்வாறு பதிந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக ஈ.பி.டி.பி. தலைமைப் பீடம் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்புகொண்டு நடவடிக்கை எடுக்கும் — இவ்வாறு மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## வெங்காய செய்கை பாதிப்பு

வலி. தென் மேற்கு, ஜன. 16

வலிகாமம் தென். மேற்கு பிரதேசத்தில் பயிரிடப்பட்ட வெங்காயப் பயிர்கள் பெருமளவில் பனிப்புழுவின் தாக்கத்துக்கு உட்பட்டுள்ளன.

தாள் கோதி நோயும் வெங்காயப் பயிர்களைப் பாதித்துள்ளது. (உ-145)

# அரசமைப்பு நிபுணர் சுவிஸிலிருந்து வருகை

சுவிட்ஸர்லாந்தின் புகழ் பெற்ற அரசமைப்பு நிபுணரான பேராசிரியர் பில்னர் நாளை மறுதினம் இலங்கை வரவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சமஷ்டி அரசியலமைப்பு முறைபற்றிய விவகாரங்களில் தேர்ச்சியுடையவரான இவர், இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அரசு முன்வைக்கவுள்ள அரசமைப்பு எவ்வாறு அமைய வேண்டும் என்பது பற்றி இங்குள்ள தலைவர்களுக்கு விதந்துரைகள் செய்வார் என்றும் —

இலங்கையின் தற்போதைய அரசமைப்பு, அரசின் உத்தேச அரசமைப்புச் சீர்திருத்தம் ஆகியவை தொடர்பாக இங்குள்ள தமிழ், சிங்கள, முஸ்லிம் அரசியல் தலைவர்களுடன் கலந்து பேசி ஆராயவுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பில் தங்கி இருக்கும்போது அவர் தமிழ்க்கட்சிகளின் தலைவர்களைத் தனித்தனியாகவும் கூட்டாகவும் சந்தித்துப் பேசவும் ஏற்பாடாகியுள்ளது. (உ-5)

## அதிகாரப்...

(3ஆம் பக்கத்தொடர்ச்சி)

யோசனைகளை அமுல் செய்வதில்கைகோர்த்துசெயற்பட வேண்டுமென்றும் சுமணசிறி பொதுமக்களைக் கேட்டுக் கொண்டார்.

தொடர்புசாதன பிரமுகரான ஹரிசியன் கருணநாயக்கா பேசுகையில் நீண்டகாலமாக இருந்துவரும் இனப் பிரச்சினைக்கு தீர்வுகான தற்போதைய அரசாங்கம் மேற்கொண்டுள்ள முயற்சிகள் பாராட்டப்பட வேண்டியவை என்று கூறினார்.

மாத்தறை மாவட்ட வெண் தாமரை இயக்கம் இதனை ஏற்பாடு செய்திருந்தது. (இ-4)

## நாளை

**தை 3**

**வியாழக்கிழமை**

**திதி:** அட்டமி மாலை 6.38வரை.

**நட்சத்திரம்:** அச்சுவினி பின் இரவு 3.00 வரை.

**ராகுகாலம்:** 2.04 - 3.34

**சுபநேரம்:** 3.04 - 9.34

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# பொங்கலன்று துப்பாக்கிச் சூடு; குருநகர் பகுதியில் ஒருவர் பலி

## மற்றும் ஒருவா காலில் காயம்

குருநகர், ஜன. 16

பொங்கல் தினமான கடந்த செவ்வாய் அதிகாலை குருநகரில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் பலியானார். மற்றும் ஒருவர் காயம் அடைந்தார்.

குருநகர் தொடர்மாடியைச் சேர்ந்த பாக்கியராசா கீத் பிரதீபன் (வயது 14) என்பவரே இறந்தவர் ஆவார்.

குருநகர் மத்திய கிழக்கு வீதியைச் சேர்ந்த தர்மதாஸ் ரஜீவ் (வயது 19) என்பவர் காலில் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் பலியான பிரதீபன் கடற்றொழிலுக்குச் செல்வதற்காக அதிகாலை 4.00 மணி அளவில் தனது வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்று தொடர் மாடிக்கட்டடத்தில் வசிக்கும் தனது நண்பன் ரஜீவ்வை அழைத்துச் சென்ற போது குருநகர் சென். றோக்ஸ் சனசமூக நிலையத்துக்கு அருகில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானதாகத் தெரிவிக்கப்பட்டது.

சூரியப்பிரகாசம் இராணுவ நடவடிக்கையின் போது இடம் பெயர்ந்து செல்லாது சென்.பற்றிக்ஸ் கல்லூரிமுகாமில் தங்கியிருந்த சமயம் அப்பொழுது அங்கு விழுந்து வெடித்த ஷெல்லினால் இவர் காயப்பட்டு பினனர் குணமடைந்திருந்தார் என்று அவரது பெற்றோரால் தெரிவிக்கப்பட்டது. (இ-15 51)

## கட்டுரையாளர்

உதயன் 14 - 01 - 1997 பொங்கல் சிறப்பு மலரில் ''தமிழ் உழவர் சிறப்புடை நாள் தைப்பொங்கல் எனும் திருநாள்'' என்ற தலைப்பில் வெளியான கட்டுரையை எழுதியவர் **சமூக ஜோதி கா. கணேசதாசன்** ஆவார். அன்றைய பதிப்பில் அவரது பெயர் தவறுதலாக விடுபட்டுவிட்டது. (ஆ-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணிகள் கப்பல் குறித்து அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 16

திருகோணமலையில் இருந்து ஒரு தொகுதி பயணிகளுடன் நாளை காங்கேசன்துறை வரும் கப்பல்கள் இங்கிருந்து ஒரு தொகுதி பயணிகளுடன் அன்றே திருமலை திரும்பும் என அறிவிக்கப்படுகின்றது.

கப்பலில் செல்ல யாழ். சிவில் அலுவலகத்தில் பெயர் பதிவு செய்தவர்களில் பட்டியல் இல. 263, 264, 415, 416, 417, 421, 422, 423, 425, 426, 427, 430, 435, 437,438, 439, 440, 442,443, 444 ஆகியவற்றில் பதிவான பயணிகள் நாளைய கப்பலில் பயணம் செய்யலாம் என்று அறிவிக்கப்படுகின்றது.

மேற்படி பட்டியல்களில் உள்ள பயணிகளுக்கு பயணம் செய்வதற்கு வழங்கப்படும் இரண்டாவது சந்தர்ப்பம் இது என்றும் —

இந்தச் சந்தர்ப்பத்தை அவர்கள் பயன்படுத்தத் தவறின் அடுத்த தடவை கப்பல் வந்து திரும்பும் போது அதில் பயணம் செய்வதற்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் அவர்களுக்கு வழங்கப்படும் என்றும் —

அந்தச் சந்தர்ப்பத்தையும் அவர்கள் பயன்படுத்தாமல் தவறவிட்டால், அதன் பின்னர் திருகோணமலைக்குச் செல்வதற்கு அவர்கள் புதிதாக விண்ணப்பிக்க வேண்டியிருக்கும் என்றும் —

யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்தது. (உ–3)

# சர்வஜன வாக்கெடுப்பு மார்ச்சில் நடைபெறும்!

இனப்பிரச்சினைக்கு அரசியற்தீர்வு காண்பதற்காக அரசாங்கத்தினால் நாடாளுமன்றத்தெரிவுக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளுக்கு மக்களின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கான சர்வஜன வாக்கெடுப்பு மார்ச் மாதம் இடம்பெறும். இதற்கான தீர்மானத்தை நாம் எடுத்துள்ளோம்—என்று நீதி, அரசமைப்பு அமைச்சர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அரசின் அதிகாரப்பரவலாக்கல் முயற்சிகள குறித்து தெரிவித்த அமைச்சர் பீரிஸ் சர்வஜன வாக்கெடுப்பு மார்ச்சில் நடைபெற உள்ள அதே சமயம் இம்மாத இறுதிக்குள் அதிகாரப் பரவலாக்கலின் முக்கிய அம்சங்கள் தவிர்ந்த அரசமைப்பு சீர்திருத்த உத்தேச யோசனைகளை வெளியிடுவோம் என்றார்.

ஒற்றையாட்சிக் கொள்கை, இரண்டாவது சபை ஒன்றை அமைத்தல், பிராந்தியசபைகளின் ஒன்றியத்தை ஏற்படுத்தல் போன்ற யோசனைகளை நாடாளுமன்றத் தெரிவுக்குழு விரிவாக ஆராய்ந்து வருகின்ற போதிலும் இவ்விடயங்கள் குறித்து எவ்வித முடிவும் எடுக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (உ–5)


## இலகு முறையில் கற்றலுக்கான உளவியல் பயிற்சி நெறி!

இலகு முறையில் கற்றலுக்கான உளவியல் பயிற்சி நெறி விரைவில் ஆரம்பமாகவுள்ளது. மேலதிக விவரங்களுக்கு **இணைப்பாளர், 'சுகவாழ்வு'**, 514/1, மருத்துவமனை வீதியிலுள்ள எமது காரியாலயத்தில் திங்கள், வியாழன் தவிர்ந்த ஏனைய கிழமை நாள்களில் காலை நேரத்தில் (9.00 - 1.00மணி) சந்திக்கவும். குறிப்பிட்ட அளவு விண்ணப்பங்களே ஏற்றுக் கொள்ளப்படும்.

**இணைப்பாளர், 'சுகவாழ்வு',**
514/1, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

(9175)


## கண்ணீர் அஞ்சலி

தெல்லிப்பழையைச் சார்ந்த

### செல்வன் அருந்தவராஜா கிருஷ்ணா

அவர்களின் நினைவாக

**(35 ஆம் நாள் 1997-01-16 ஆம் திகதி வியாழக்கிழமை)**

இந்தப்பாரினில் பல பொது நல சேவைகள் புரிந்த
வேளையில்
நமது காலம் எம்முடன் ஒத்துழைக்காமல் போயிற்று.

காலனும் மறுக்காமல் நீரோடையில் -
செல்வன் கிருஷ்ணாவின் உயிர் கவர்ந்தது ஏனோ?
சூரியோதயம் மலர்ந்த வேளையில் பாட்டில் நீர்
வலித்து என்பார்கள்
அது விதியானால் மதியும் மங்கிவிடும் என்பார்கள்
சான்றோர் வாக்கு.

அன்னாரது ஆத்மா சாந்தியடைய வைரவேஸ்வரப் பெருமானை பிரார்த்தனை செய்கின்றோம்.

**அன்பர் ஷர்மாஜி,**
இளவாலை.

(44702)

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் S. N. ஆறுமுகம்

யாழ்/வீமன்காமம் மகாவித்தியாலய ஆசிரியை

**திருமதி வ. ரட்ணம்**

**அவர்களின் அன்புத் தந்தையாராகிய S, N. ஆறுமுகம்**

அவர்கள் 11-1-97 அன்று மறுமைக்குள் பிரவேசித்தமையையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடையவும் ஆண்டவரைப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,**
**யா/வீமன்காமம் மகா வித்தியாலயம்,**
**தெல்லிப்பழை.**

(சி/3937)

# விசேட அடையாள அட்டைகள்

யாழ்ப்பாணம், ஜன. 16

யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட நெடுங்குளம் (யா/61), கொழும்புத்துறை கிழக்கு ((யா/62) கிராம சேவையாளர்கள் பிரிவு மக்களுக்குரிய விசேட அடையாள அட்டைகள் இன்று விநியோகிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கொழும்புத்துறை வீதியில் உள்ள கிராம சேவையாளர் பணிமனையில் இன்று 9 மணி தொடக்கம் விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படும்.

★ ★ ★

வலிகாமம் தெற்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட தாவடி வடக்கு (யா/190), தாவடி கிழக்கு (193), சுன்னாகம் கிழக்கு (197) ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கு இன்று பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்படும்.

நாளை வெள்ளிக்கிழமை உடுவில் மத்தி (யா/184), உடுவில் வட மத்தி (யா/185) ஆகிய கிராம சேவையாளர் பிரிவினருக்கும்—

20 ஆம் திகதி திங்கட்கிழமை உடுவில் வடக்கு (யா/186), ஈவினை(யா/209) ஆகிய கிராம சேவையாளர் பிரிவினருக்கும்— விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படும். (அ-152)

## கிட்டு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடத்த ஏற்பாடாகியுள்ளது என்றும் —

மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதே சமயம் கிட்டு மற்றும் ஒன்பது வேங்கைகளுக்கு வீர வணக்கம் தெரிவிக்கும் சுவரொட்டிகள் வலிகாமம் பகுதியில் ஆங்காங்கே புலிகளால் ஒட்டப்பட்டுள்ளன.

## லெப்டினன்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி )

வாகனத்தைச் செலுத்தியதால் இவர் காயங்களுடன் தப்பினார் என்றும் —

இல்லாவிட்டால் வாகனத்தில் இருந்த சகலரும் கொல்லப்பட்டிருப்பர் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில்கெப்பிட்டிக்கொலாவ இராணுவ முகாம் கப்டன் பிரியசாந்த உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

லெப்டினன்ட் கேணல் அஜித் சில்வா சம்பவம் நடந்த இடத்துக்கு வருவார் என்பது குறித்து புலிகளுக்கு முன்னரே தகவல் கிடைத்திருக்கும் என்பதை நிராகரிக்க முடியாது என்று படைவட்டாரங்கள் கூறின.

வெலிஓயாவைத் தலைமையகமாகக் கொண்ட 6 ஆவது பிரிகேட்டின் கீழ் உள்ள 3 முகாம்களில் கஜபாபுர முகாமும் ஒன்றாகும்.

(முன்னர் வந்த செய்தி 3 ஆம் பக்கத்தில்.)

(உ–3-150)

## யாழ்ப்பாணத்தில் ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னர் என்ற தகவலை அவர்கள் வெளியிடவில்லையாயினும், யாழ். மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை வெளி உலகுக்குக் கொண்டு வருவதற்குரிய நடவடிக்கைகளில் தாங்கள் ஈடுபடுவர் என அவர்கள் தெரிவித்தனர்.

ஈ பி. டி. பி. ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் தனது அலுவலகத்தைத் திறந்து செயற்பட்டு வருவது தெரிந்ததே.

ரெலோ இயக்கமும் யாழ்ப்பாணத்தில் தனது அரசியல் பணிகளை ஆரம்பிக்கப்போவதாகத் தெரிவித்துள்ளது.

ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணி யாழ்ப்பாணத்தில் அலுவலகம் திறப்பது குறித்து எந்த முடிவையும் மேற்கொள்ளவில்லை.

(உ-3)

# கடற்படைக்கு வந்த முட்கம்பிகள் மாயமாகின

## 6 கடற்படையினர் கைது!

கொழும்பு, ஜன. 16

கடற்படையினரின் முகாம் பாதுகாப்புக்கென கொள்வனவு செய்யப்பட்ட முட்கம்பிகளை முகாமுக்கு எடுத்து வராமல், வர்த்தகர் ஒருவருக்கு விற்றதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக ஆறு கடற்படையினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் பற்றி கூறப்படுவதாவது:-

வடக்கில் உள்ள படை முகாம்களின் பாதுகாப்புக்குப் பயன்படுத்தவென பல லட்சம் ரூபா பெறுமதியான முட்கம்பிகள் ஒறுவல உருக்குக் கூட்டுத்தாபனத்திடம் கொள்வனவு செய்யப்பட்டன.

இந்த முட்கம்பிகளில் ஒரு பகுதி அத்துருக்கிரிய வர்த்தகர் ஒருவருக்கு விற்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

ஒறுவலவில் இருந்து முட்கம்பிகளைக் கொழும்பில் உள்ள கடற்படைக் களஞ்சியத்துக்கு எடுத்து வருவதற்காகச் சென்ற லொறியைக் காணாததால், அதனைத் தேடிச் சென்ற கடற்படை அதிகாரிகள் அந்த முட்கம்பிகளும், லொறியும் அத்துருக்கிரியவில் உள்ள வர்த்தகர் ஒருவரின் வீட்டில் இருந்து கைப்பற்றியதாகக் கூறப்படுகின்றது.

கறுப்புச் சந்தையில் விற்கத் தயாரான நிலையில் இருந்த போதே அவை கைப்பற்றப்பட்டன.

சம்பந்தப்பட்ட வர்த்தகர் தலைமறைவாகி விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-150-3)

## தொடர்பு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சித்தமை குறித்து ஏற்பாட்டாளர்கள் பெரும் அதிருப்தி அடைந்தனர் எனவும் —

இலங்கை வானொலி தகவல் வெளியிட்டது.

கொழும்பில் இயங்கும் தனியார் தொலைக்காட்சிச் சேவை ஒன்றின் செய்திப் பிரிவின் இயக்குனர் பெண்மணி ஒருவர், கிழக்கு மாகாணத்தில் புலிகள் நடத்திய தாக்குதல் சம்பவம் ஒன்று சம்பந்தமான செய்தியைப் பிரசுரித்தமை தொடர்பாக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் அண்மையில் கைது செய்யப்பட்டது தெரிந்ததே.

(உ–4)

## கொழும்பு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெறவிருக்கும் இந்திய வெளிவிவகார அமைச்சரின் கொழும்பு விஜயம், இருதரப்பு உறவுகளில் மிகவும் முக்கிய இடத்தைப் பிடிப்பதாக அமையும் என்று செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

அமைச்சர் குஜ்ராலுடன் இந்திய வெளிபுறவுச் செயலாளர் சல்மான் ஹைதரும் இலங்கை வருகின்றார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் அமைச்சர் குஜ்ரால் அடிப்படை விடயங்கள் குறித்துப் பேசுவார்.

பின்னர் நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸுடன் விரிவான — விசேடமான பேச்சுக்களை அவர் நடத்துவார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்திய வெளியுறவு அமைச்சரின் கொழும்பு விஜயத்தின் போது இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பல ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்படவிருக்கின்றன.

விடுதலைப்புலிகள் அமைப்புக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துமாறு இந்தியா இலங்கைக்கு நிர்ப்பந்தம் கொடுக்க வேண்டும் என்று தமிழ்த் தலைவர்கள் இந்தியாவைக் கேட்டிருந்தனர் என்றும் —

ஆனால் அந்த முயற்சி வெற்றியளிக்கவில்லை என்று தமிழ்த் தலைவர்கள் கூறினர் என்றும் — கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளின் போது பொது மக்கள் உயிரிழப்பதைத் தவிர்க்க. தேவையான ஏற்பாடுகளைச் செய்வதாக இந்தியாவிடம் இலங்கை உறுதியளித்துள்ளது என்றும் செய்திகள் மேலும் தெரிவித்தன.

(உ-150–3)

## நகைகளை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

முடிவு செய்திருப்பதாகவும் ஜெயலலிதா கூறினார்.

விளக்க மறியலில் இருந்து விடுதலையான பின்னர் கட்சியின் தலைமைப் பணிமனையில் செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார். அப்போது அவர் காதணிகளோ காப்புகளோ, கைக் கடிகாரமோ அணிந்திருக்கவில்லை.

தான் வழமையாக அணியும் மேலாடையையும் (அங்கியையும்) அணியப் போவதில்லை என்றார் அவர்.

''சமீபத்தில் எனது வீட்டில் நடந்த சம்பவங்களின் பின் நான் இந்த முடிவை எடுக்கத் தள்ளப்பட்டேன். நடந்த சம்பவங்கள் என்னை மிகவும் வேதனைப் படுத்திவிட்டன. என் வீட்டிலிருந்த அனைத்துத் தங்க நகைகளையும் எடுத்து விட்டார்கள். எனக்கு அணிவதற்கு தங்க நகைகள் ஏதும் இல்லை''— இவ்வாறு அவர் மேலும் கூறினார்.

''நான் நிரபராதி என்பதை நிரூபிப்பேன். என்னிடம் இருந்து கைப்பற்றிய பொருள்களை மீட்பேன்.''— என்றும் அவர் கூறினார்.

## ஜனாதிபதி...

( 1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கப்பட்டுள்ளது. இந்த இடமாற்றம் அடுத்த வாரம் செயற்படுத்தப்படும் என்று நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாண விவசாயிகளுக்கு என்று கொழும்பில் இருந்து விதை உருளைக் கிழங்கு அனுப்பப்பட்டது. அதனோடு சேர்த்து அதே கப்பலில் யாழ். உயரதிகாரி ஒருவரின் பெயரில் உருளைக் கிழங்கு அனுப்பப்பட்டுள்ளது.

அந்தக் கிழங்கு யாழ்ப்பாணத்தில் பாவனையாளர்களுக்கு கிலோ 200ரூபாவீதம் விற்கப்பட்டுள்ளது என ஜனாதிபதிக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து வடமாகாண புனர்நிர்மாண அதிகார சபைத் தலைவர் சோமபால குணதீர புனர்வாழ்வு ஆலோசகர் தேவநேசன் நேசையா ஆகியோர் இந்த முறைப்பாடு தொடர்பாக விசாரிக்க அங்கு சென்றார்கள். விசாரணைகளை முடித்துவிட்டு கடந்த வியாழன் கொழும்பு திரும்பினர். அவர்களின் அறிக்கை கடந்த வெள்ளியன்று ஜனாபதியிடம் கையளிக்கத் தயாராகவிருந்தது என்று அத்தியாவசிய ஆணையாளர் நாயகம் திணைக்கள தகவல்கள் தெரிவித்தன.— இவ்வாறு அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்தது. (உ-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16-01-1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org